பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை 18.12.2018 கதிர் 43

**இனிது ரகசியம் அல்ல!**

நாடாளுமன்றம் மீண்டும் இன்று கூடுகின்றது.


கடந்த தடவை சில தினங்கள் நாடாளுமன்றம் கூடியபோது அங்கு பிரதமரும் இல்லை. அமைச்சர்களும் இல்லை. அரசும் இல்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் பக்கம் 02

## நிறைவேற்று அதிகாரத்துக்குச் சமாதி கட்ட

# தேசிய ஜனநாயக முன்னணி உதயம்

### காலிமுகத்திடலில் 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி' வெற்றிக் கொண்டாட்டத்தில் பிரதமர் ரணில் அறிவிப்பு





கொழும்பு, டிசெம்பர் 18

"அரசியல் சதித் திட்டத்துக்கு நாம் முடிவு கட்டிவிட்டோம். இனி நாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு முடிவுகட்ட வேண்டும். அதற்காக தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளோம். அது அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படும். எங்களது சட்டத்தரணிகள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தப் புதிய அரசியல் கூட்டணிக்கான அனுமதி வெறப்படும்."

– இவ்வாறு ஐ.தே.கவின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். பக்கம் 02

## பின் கதவால் நுழைந்தோரை முன் கதவால் அனுப்பினோம்!

### சஜித் பிரேமதாஸ 'பளீர்'

கொழும்பு, டிசெ. 18

பின் கதவால் அதிகாரத்துக்கு வந்தவர்களை 50 நாள்களில் முன் கதவால் வெளியேற்றியுள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு, காலிமுகத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி' வெற்றிக் கொண் பக்கம் 02

## கூட்டமைப்பின் எதிர்ப்பால் சுவாமிநாதனுக்குச் சிக்கல்!

### அமைச்சரவையில் இறுதி நேர மாற்றம்

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை நாளை புதன்கிழமை பதவியேற்கும் எனத் தெரியவருகின்றது.

இறுதிப்படுத்தப்பட்ட அமைச்சரவைப் பட்டியலை இறுதிநேரத்தில் மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டதாலேயே நேற்று நடைபெறவிருந்த பதவியேற்கும் நிகழ்வு நாளைவரை பிற்போடப்பட்டுள்ளது. பக்கம் 02

## 8 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பக்கம் 11

## பௌத்த மதத்துக்கு முன்னுரிமை தமிழ்க் கூட்டமைப்பும் இணக்கம்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கவில்லை. பௌத்த மதத்துக்குத் தற்போது வழங்கப்படும் முன்னுரிமையை அப்படியே நீடிப்பதற்கு அது இணக்கம் தெரிவித்துள்ளது. பக்கம் 11

## புதிய அமைச்சரவை நாளை பதவியேற்கும்

### மீள்குடியேற்றம், புனர்வாழ்வு இராதா வசம்?

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை நாளை புதன்கிழமை பதவியேற்கும் எனத் பக்கம் 11

## சர்வாதிகார ஆட்சிக்கு இனிமேல் இடமில்லை

### சம்பிக்க திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 18

சுமார் 50 நாள்களாக நாட்டை உலுக்கிய அரசியல் சதித் திட்ட நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது. அரசியல் சதித் திட்டத்துக்கு – சர்வாதிகார பக்கம் 11

## படையினர் விவசாயச் செய்கையை நிறுத்தி காணிகளை விடுவிக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, டிசெ. 18

வடக்கு – கிழக்கில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாயச் செயற்பாடுகள் மேலும் தொடரப்படுவதை அனுமதிக்க முடியாது. அத்தகைய பக்கம் 11

## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு: ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

### அமெரிக்காவும் பாராட்டு

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி அமைதியாகவும், அரசமைப்புரீதியாகவும், தீர்த்து வைக்கப்பட்டிருப்பதை அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் வரவேற்றுள்ளன. பக்கம் 11

## ஐ.தே.கவில் ஒருபோதும் இணையவே மாட்டேன்!

### வியாழேந்திரன் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் பக்கம் 11

## அரசியல் கைதிகள் விடுவிப்பு குறித்து மைத்திரியின் நிபந்தனையை ஏற்கோம்

### மாவை சேனாதிராசா திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 18

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு இராணுவத்தினரும் விடுதலை செய்யப்படவேண்டும் என ஜனாதிபதி நிபந்தனை விதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பக்கம் 11

## புதிய ஐ.தே.க. அரசின் பட்ஜெட் பெப்ரவரியில்

கொழும்பு, டிசெ. 18

புதிய அரசின் வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் முன்வைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற பக்கம் 11

## நாமல்குமாரவின் நாடகம் விரைவில் அம்பலமாகும்

### ஐ.தே.க. நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

நாமல் குமார என்பவரை வைத்துக் கடந்த 52 நாள்களாக அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் உண்மைத் தன்மையை விரைவில் வெளிப்படுத்துவோம் என பக்கம் 11

# வவுனியாவில் விகாரை அமைப்பதற்கு முயற்சி!

## தொல்பொருள் திணைக்களத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை

வவுனியா, டிசெ. 18

வவுனியா – சமளங்குளம் கல்லுமலை விநாயகர் கோவிலில் பௌத்த விகாரையை அமைக்கமுயன்றதொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டினால், கிராம மக்களுக்கும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.



வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டு வரப்பட்டது. இந்தக் கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் எனப் பல காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினர் கல் ,மணல் மற்றும் பல கட்டடப் பொருட்கள் இவ்வளாகத்தில் இறக்கி பௌத்த ஆலயத்தை அமைக்கும் வேலைகளை முன்னெடுத்திருந்தனர். பொதுமக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையையடுத்து வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

அதன் பின்னர் நேற்று மீண்டும் தொல்பொருள் திணைக்களத்தினால் பொலிஸாரின் பாதுகாப்புடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அவ்விடத்துக்கு வருகை தந்த கிராமவாசிகள் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தமையுடன் வேலைகளை இடைநிறுத்துமாறு கூறியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் ஆகியோர் வருகை தந்து இது தொடர்பாக அப்பிரதேச மக்களுடனும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடனும் கலந்துரையாடியமையுடன் இதனைப் புனரமைப்புச் செய்யலாமே தவிர புதிதாகக் கட்டமுடியாதெனவும், தற்போது வேலைகளை நிறுத்துமாறும் இவ்வாறாக கடிதத்தில் உறுதிபடுத்தப்பட்டு வழங்கிய பின்னர் புனரமைப்புச் செய்யுமாறு கூறியதன் அடிப்படையில் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து விலகி சென்றனர். (ஐ)

### தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று மாலை நடைபெற்ற 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி' வெற்றிக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக்கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடிய அனைவருக்கும் முதலில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒக்ரோபர் 26 ஆம் திகதியுடன் எல்லாம் முடிவடைந்துவிடும் எனச்சிலர்நினைத்தனர். ஆனால், மக்கள் சக்தி என்றால் என்னவென்பதை நாம் காட்டியுள்ளோம். பல சவால்களுக்கு மத்தியில் ஜனநாயகத்தைப் பாதுகாத்தோம்.

இனிவரும் காலப்பகுதியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். மக்கள் பக்கம் நின்று தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். ஜனநாயகத்துக்காக அணிதிரண்ட கூட்டணி தொடர வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிப்பதற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளை வழங்குங்கள்.

எப்போது தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் அனைத்துக் கட்சிகளிடமும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

எமதுகட்சியில்உள்ள அனைத்துக் குறைபாடுகளையும் கண்டறிந்து அவற்றை எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எங்களுக்குப் பலம் இல்லையென்று யாரும் நினைக்க வேண்டாம். மக்கள்தான் எங்கள் பலம்.

சிறுபான்மை அரசைக் கொண்டிருந்த ஹிட்லர், அன்று உலகப் போர் முடியாவிட்டால் பொதுத் தேர்தல்தான் வேண்டும் என்றிருப்பார். ஜனநாயகம் இங்கு மிளகாய்த்தூள் ஆனது. நாங்கள் சிக்ஸர் அடித்தோம். உயர்நீதிமன்றமும் சிக்ஸர் அடித்தது.

அரசியல் சதித் திட்டத்தில் படுதோல்வியடைந்தவர்கள் இப்போது இனவாதம் பேசுகின்றனர். நாட்டைப் பிரிப்பதாக கூறுகின்றனர். நாங்கள் நல்லிணக்கத்தையும் அரசியல் தீர்வையும் பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்தான் ஏற்படுத்துவோம் – என்றார். (ஐ)

# 10 தடவைகள் பிரதமர் பதவியை மறுத்தேன்

## கூறுகிறார் சஜித்

பிரதமராகுமாறு எனக்கு பத்து தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டது. சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு 14 தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காலி முகத்திடலில் இடம்பெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனக்கு அழைப்பு விடுக்கப்பட்ட 10 தடவைகளும் பிரதமர் பதவி வேண்டாம் என்று கூறினேன். அதேபோன்று சபாநாயகரும் 14 தடவைகள் பிரதமர் பதவிவேண்டாம்என்றுகூறினார். எனக்குச் சுய கௌரவம் பெறுமதியானதைப் போன்று எனது தந்தையும் பெறுமதியானவர், தாயும் பெறுமதியானவர் – என்றார் சஜித்.

### கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.மு. அரசு அமைக்கவுள்ள அமைச்சரவையில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சுப் பதவி சுவாமிநாதனுக்கு மீண்டும் வழங்கப்படமாட்டாதெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவருக்கு இந்த அமைச்சை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதால் அந்த அமைச்சுப் பதவி ஐ.தே.கவின் மலிக் சமரவிக்கிரமவுக்கு அல்லது இராதாகிருஷ்ணனுக்கு வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்காத பட்சத்தில் வேறு எந்தப் பதவியையும் எடுக்காதிருக்க இராதாகிருஷ்ணன் எம்.பி. முடிவு செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

### பின் கதவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அண்மையில் நாடாளுமன்றில் அரங்கேறிய கொடூரமான நடவடிக்கைகளுக்குத் தந்தையும் மகனும் கட்டளையிடுவது காணொலி ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# குடாநாட்டின் சில பகுதிகளில் நேற்று கடல் நீர் பெருக்கெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். குடாநாட்டில் கடல் கொந்தளிப்பு காரணமாக கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது.

தொண்டமானாறு கடல் நீரேரி பெருக்கெடுத்ததால் அச்சுவேலி – வல்லை கிராமத்துக்குள் கடல்நீர் பெருக்கெடுத்து வருகிறது.

அத்துடன் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள முனைப்பகுதி கடலரிப்புக்கு உள்ளாகி வருவதுடன் அங்கு கடல் நீர் உட்புகுந்ததால் மீனவர்களின் வலைகள் மற்றும் படகுகள் நீரில் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

இது தவிர கடல் கொந்தளிப்பு காரணமாக கடல் நீர உயர்ந்து தாழ்ந்த குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்துள்ளது. இதனால் பல நூற்றுக்கணக்கான மக்கள் அச்சத்தால் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ளனா. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்கதவு மூலம் கொண்டு வரப்பட்ட பிரத மரையும், அவரது அமைச்சரவையும், அரசையும் சட்டமுறையற்றது என்ற வழக்கின் காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு மூலம் செயற்படத் தடை விதித்திருந்தது.

அதனால், பிரதமரோ, அமைச்சரவையோ இல்லாமல், பல நாள்கள் நாடாளுமன்றம் தொடர்ந்து கூடியது.

அத்தோடு, பெரும்பான்மையே பெறாத 'மைனோரிட்டி' அரசாங்கத்தின் ஆளும் தரப்பினர் என்று கூறும் அணியினரும் நாடாளுமன்றுக்கு வரவில்லை. அதனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெற்ற தரப்பினர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்க நாடாளுமன்றக் கூட்டத்தொடர் பல தினங்கள் நடைபெற்றது.

சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் இன்று மீண்டும் நாடாளுமன்றம் கூடுகின்றது.

இதுவரைப் பெரும்பான்மைப் பலத்தோடு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த தரப்பினர் இன்று ஆளும் கட்சி வரிசையில் அமரப் போகின்றனர். அவர்கள் தரப்பில் – அவர்களது அரசில் – இன்று பிரதமர் மட்டும்தான். இன்னும் அவரின் அமைச்சரவை நியமிக்கப்படவில்லை.

அத்தோடு இதுவரை பெரும்பான்மைப்பலம் பெறாமையால், ஆளும் கட்சித் தரப்பாக இருந்தும் நாடாளுமன்றுக்கு வராமல் ஒளித்துப் பிடித்து விளையாடிய சு.க. – பொதுஜன பெரமுன தரப்பினர் தாங்கள் உண்மையில் பெரும்பான்மை பெறாதமையால், அரசில் இருக்க முடியாது, எதிர்க்கட்சி வரிசையில்தான் அமரமுடியும் என்ற யதார்த்தத்தை ஏற்று எதிரணி வரிசையில் வந்து அமர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆக, இன்று அரசு – எதிர்க் கட்சிகள் என்று இரு தரப்பும் நிரம்பி வழிய, பிரதமரை மட்டும் கொண்ட அரசுத் தரப்பின் பங்களிப்போடு நாடாளுமன்ற அமர்வை சபாநாயகர் கரு ஜயசூரிய கொண்டிழுப்பார் என எதிர் பார்க்கலாம்.

சு.க. – பொது ஜன பெரமுன தரப்பினர் இன்று நாடாளுமன்றத்தில் எதிரணி வரிசையில் அமர்கின்றமையால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தங்களுக்குத் தரவேண்டும் என்ற கோரிக்கையைத் திரும்பவும் இன்று எழுப்புவர் என்பது திண்ணம்.

இப்போது அவர்களது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான தெரிவுகளில் பிரதான நபர் மஹிந்த ராஜபக்ஷதான்.

பதிதாக அரசு அமைக்கும்ஐ.தே. முன்னணியுடன் அரசில்சு.கவோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியோ இணையுமானால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிசம்பந்தனிடமேதப்பிவிடும். மஹிந்த தரப்புக்குப் போகாது. ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் கடந்த பொதுத் தேர்தலில் சு.கவையும் உள்ளடக்கிய பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பிலே போட்டியிட்டே எம்.பியாகியிருக்கின்றனர். அந்தக் கட்சியையே இன்றுவரை நாடாளுமன்றத்தில் அவர்கள் பிரதிபலித்து அங்கம் வகித்து வருகின்றனர். அந்தக் கட்சி – சு.கவையும் உள்ளடக்கிய பொ.ஐ. முன்னணி – புதிய அரசில் அக்கட்சியின் பெயரில் ஒன்றிணைந்தால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரும் உரிமையை மஹிந்த ராஜபக்ஷ தரப்பு சட்டரீதியாக இழந்துவிடும். அத்தகைய சூழலில் அப்பதவி தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரா. சம்பந்தன் வசமே இருக்கும்.

இதற்கிடையில் – மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படுகின்றமையை மற்றொரு பிரதான எதிர்க்கட்சியான ஜே.வி.பி. கடுமையாக எதிர்கின்றது.

*"இதுவரை இந்த நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்திருந்த மஹிந்த ராஜபக்ஷ எம்.பி., எதிர்க்கட்சி உறுப்பினராகக் காத்திரமான பங்களிப்பு எதையும் வழங்கவேயில்லை.*

*"நல்லாட்சி அரசு இதுவரை சமர்ப்பித்த மூன்று வரவு – செலவுத் திட்டங்களில் ஒன்றைக்கூட அவர் எதிர்த்து வாக்களிக்கவில்லை. இவ் வாண்டு முற்பகுதியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது அதனை அவர் ஆதரித்து வாக்களிக்கவில்லை. ஓடி ஒளித்து விட்டார்.*

*"நாடாளுமன்றத்தில் பிரச்சினைகள் வந்தபோது எல்லாம் – அவர் சத்தம் சந்தடியின்றி நைஸாக வெளியேறுவதுதான் நடந்திருக்கிறது. அப்படிப்பட்டவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுப்பது பொருத்தமற்றது"* – என்று சீறுகின்றது ஜே.வி.பி.

ஜே.வி.பி கூறுவதிலும் ஒரு நியாயம் இருப்பது போல எனக்குத் தோன்றுகின்றது. உங்களுக்கு.....?

பிற்குறிப்பு:– எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நிமால் ஸ்ரீபால டி சில்வாவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டிவிட்டார் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. நிச்சயம் இந்த முடிவுக்கு எதிராக மஹிந்த தரப்புச் சீறும். அங்கும் உள்வீட்டுக் கலகம் இனி ஆரம்பம்தான்.

– மின்னல் –

## நாடாளுமன்றக் குழப்பம்; விசாரணை சி.ஐ.டியிடம்

கொழும்பு, டிசெ. 18

நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற குழப்ப நிலைத் தொடர்பில் விசாரணை செய்யும் பொறுப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை, மிளகாய்த் தூள் வீசப்பட்டமை, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தற்போது பலரிடம் வாக்குமூலங் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் சபாநாயகர் கரு ஜயசூரியவின் கையொப் பத்துடன் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விரைவில் பொதுத் தேர்தல்?

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாக கூறப்படுகின்றது.

இதன்படி விரைவில் நாடாளுமன்றத்தில் பொதுத் தேர்தலுக்கான யோசனையைக் கொண்டு வந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று தேர் தலுக்குச் செல்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, விரைவில் தேர்தலுக்குத் தயாராகு மாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் முன்னிலையில் தெரிவித்துள் ளார்.

சட்டப்படி அரசமைப்பு ரீதியாக நாடாளுமன்றத் தின் அனுமதியுடன் தேர்தலுக்குச் செல்லும் வகை யிலேயே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற நடவடிக்கையெடுத்துள்ளதாக கருத்துக்கள் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துப்பாக்கி விற்பனையில் ஈடுபட்ட 3 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 18

கம்பஹா – மாதம்பைப் பகுதியில் சட்டவிரோத மாகத் துப்பாக்கி விற்பனையில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளோம் என கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகஸ்தர்களால் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடமிருந்து 4 தோட் டாக்களைக் கொண்ட துப்பாக்கியொன்றும் மகஸின் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம், இந்தத் தொழிலில் ஈடுபட்டு வரும் மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மினுவாங்கொட மற்றும் பிங்கிரிய பகுதிகளைச் சேர்ந்த 30 மற்றும் 43 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை கம்பஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர். (ஐ)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்தவுக்கே!

### சபாநாயகரிடம் கோருவோம் என்கிறார் பீரிஸ்



கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சியாகச் செயற்படுமளவுக்கு அதிக உறுப்பினர்களைக் கொண்டிருப் பதால், எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் புக்கே வழங்கப்படவேண்டுமெனச் சபாநாயகரை வலியுறுத்தவுள்ள தாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வழங்கு மாறு நாம் சபாநாயகரை வலியுறுத் தவுள்ளோம். தற்போதைய நிலையில் மஹிந்தவுக்கு அந்தப் பதவியை வழங்காமலிருக்கசந்தர்ப்பம் இல்லை.

அமைச்சரவையை நியமிப்பது இலகுவான காரியம் அல்ல. அமைச் சரவை அமைச்சர்களின் எண் ணிக்கை 30 ஆக இருக்க வேண்டும். எனவே தேசிய அரசு ஒன்று அமைக் கப்பட்டால் மாத்திரம் தான் இந்த அமைச்சரவை எண்ணிக்கையில் பாதிப்பு ஏற்படாது.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் ஜனாதிபதியால் அதனை நிராகரிப்பதற்கு வாய்ப்புள் ளது – என்றார். (ஐ)

# காணாமற்போனோர் பிரச்சினை முடிவின்றித் தொடர்வது கவலை

### ஜனாதிபதியிடம் மன்னார் ஆயர் சுட்டிக்காட்டு

மன்னார், டிசெ. 18

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சி னைகள் இன்னும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக் கின்றன. தம் அன்புக்குரியவர்களை இழந்து நிற்கும் உறவுகளின் போராட்டம் தொடர் கதையாகவே உள்ளது.

இந்த நாட்டில் அரசியல் உறுதித் தன்மை நிலை பெறுவதையும், ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படு வதையும் உறுதி செய்யுமாறு ஜனாதிபதியை நாம் விநயமாக வேண்டி நிற்கின்றோம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண் டகை தெரிவித்தார்.

வருடந்தோறும் தேசிய ரீதியில் நடைபெறும் இயேசு பிரானின் பிறப்பும், நத்தார் கொண்டாட்டமும் மன்னா ரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த மூன்று வாரங்களாக மிகவும் கொந்தளிப்பாக இருந்த இலங்கை அரசியல் நிலைமை தற்பொழுது படிப்படியாக வழமைக்குத் திரும்புவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் முள்ளிக்குளம் கிராமம் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அந்தக் கிராம மக்கள் நூற் றாண்டு காலமாக வாழ்ந்து வந்த தங்கள் பாரம்பரிய தாயகப் பிரதேசத்தைவிட்டு தற்காலிக இடங்களில் மிகுந்த ஏக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே ஜனாதிபதி, அரசியல் கைதிகளின் பிரச் சினை, காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம், காணி



விடுவிப்பு போன்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் மக்களின் சார்பாக அன்போடு வேண்டுகோள் விடுக் கின்றேன்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் இன்னும் அவர்கள் விடுதலை ஆகாமலே சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கின்றனர். அவர்களின் விடுதலை நாளை நோக்கி அவர்களின் உறவினர்கள் ஏக்கத்தோடு காத்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் மடுத்திருப்பதியை புனித பூமியாகப் பிரகடனம் செய்யும் முயற்சிக்கும், மடுத் திருப்பதியில் இந்திய வீட்டுத்திட்டத்தை கொண்டுவரும் முயற்சிக்கும் நாங்கள் நன்றி கூறுகின்றோம். அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுப்பிப்பதன் தொடர் பான வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலே உள்ளன – என்றார். (ஐ)

# முன்னாள் போராளிகளை துன்புறுத்துவதை நிறுத்துக!

### அரசிடம் கோருகிறார் சீ.வீ.கே.சிவஞானம்

யாழ்ப்பாணம்,டிசெ. 18

விசாரணை என்ற பெயரில் முன்னாள் போராளிகளை துன் புறுத்துவதை அரசு நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் குறிப்பிட் டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தொடர்ந்தும் முன்னாள் போராளிகளை விசாரணை என்ற பெயரில் நான்காம் மாடிக்கு அழைத்து அச்சுறுத் தும் செயற்பாடானது கண் டிக்கத்தக்கது. உடனடியாக அரசு இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தவேண்டும்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசியை 19.12.2018 ஆம் திகதி மீண்டும் ஒருமுறை விசா ரணைக்கு சமுகமளிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு கோரியிருப்பதாக செய்தி கள் வெளியாகியுள்ளன.

ஜனநாயகப் போராளி கள் கட்சி ஆரம்பிக்கப்பட முன்னரும் அதற்குப் பின்னரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர். அண்மைக் காலத்தில் ஜனநாயகப்போராளி கள் கட்சியின் செயலாளர் வேந்தன் மற்றும் அதன் தலை வர் கதிர் ஆகியோரும் பயங்கர வாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்பட்டிருக்கின் றனர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மூன்று பிரதானிகளை



யும் குறிவைத்து விசாரணைக் குட்படுத்துவது அவர்களை அச்சுறுத்தி, அவர்களது ஜன நாயக நீரோட்ட இணைவை இல்லாதொழிப்பதை நோக் கமாகக் கொண்டதாகவே பார்க்கப்படவேண்டும்.

இவர்கள் தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத் தின் போராளிகளாக இருந் தவர்கள் என்பதை வெளிப் படுத்தியே தமது கட்சியை ஆரம்பித்து வெளிப்படை யாகச் செயல்படுகின்றவர் கள். இந்தக் கட்சியின் உறுப் பினர்களும் புனர்வாழ்வ ளிக்கப்பட்டவர்கள் ஆவர்– என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பேரினவாதப் படுகுழியில் மைத்திரி

கடைசியில் வழமை போல தாமும் கூட தென்னிலங்கை யின் பௌத்த, சிங்கள பேரினவாதப் போக்குடைய சராசரி அரசியல்வாதி என்பதைக் காட்டிவிட்டார் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன.

தமிழர் தரப்பு – குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தலைவர்கள் – எதிர்பார்க்காத, நம்பமுடியாத ஓர் உரையை அவர் ஆற்றியிருக்கின்றார்.

2005 ஜனவரியில் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தினார்கள்.

சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும், பெரும்பான்மையினரான சிங்களவர்களில் கணிசமான தொகையினரோடு சேர்ந்து தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தில் பலரும் எதிர்பாராத அதிரடி அதிகார மாற்றம் ஒன்றை ஏற்படுத்தினர்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் உச்சியில் நின்ற மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தை யாரும் எதிர்பார வகையில் வீழ்த்தி, இனசௌஜன்னியத்துக்கும், மத நல் லிணக்கத்துக்கும், மொழிப் புரிந்துணர்வுக்குமான ஆட்சிப் பீடம் ஒன்றை அவர்கள் ஏற்படுத்தினர் என்று மகிழ்ந்தனர்.

கடைசியில் தாங்கள் பிடிக்கப் போன பிள்ளையார் குரங் காய்த்தான் வந்து முடிந்திருக்கின்றது என்பதை அவர்கள் உணரும் நிலைமைதான் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

அண்மையில் கூட தமிழர்களின் தலைவரான இரா. சம்பந்தனைச் சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, *"நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாவேன் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட என்னை இன்று இந்தக் கதிரைக்குக் கொண்டு வந்தவர்கள் வடக்கு, கிழக்கில் மாத்திரமல்லாமல், இலங்கை முழுவதிலும் இருக்கும் தமிழர்களும்தான். அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எனக்கு வாக்களித்து, என்னை இந்தப் பதவிக்குக் கொண்டு வந்தமையை மறக்கவே மாட்டேன்"* – என்று கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று வார்த்தை தவறிவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற நிகழ்வில் அவர் ஆற்றிய உரை பச்சை இனவாதப் போக்குடையது.

போர் வெற்றியைத் தேடித் தந்த எந்த இராணுவ வீர னையும் தண்டிக்க இடமளிக்கமாட்டேன் என்றும் –

இராணுவத்தினரைத் தண்டித்துக் கொண்டு புலிகளை விடுவிப்பதா என்றும் –

வெளிநாட்டில் இருக்கும் விடுதலைப் புலிகளைத் தண் டிக் வேண்டும் என்றும் –

அவர் ஆற்றிய உரை இந்த நாட்டில் இன அமைதியை யும், சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும், புரிந் துணர்வையும் ஏற்படுத்தும் ஒரு தலைவனுக்குரிய கருத்து நிலைப்பாட்டை பிரதிபலிப்பனவல்ல என்பது தெளிவு.

எந்த பௌத்த, சிங்கள மேலாதிக்கமும் பேரினவாத போக்குடைய தென்னிலங்கை ஆட்சித் தலைமையை வீழ்த்தி மைத்திரிபால சிறிசேனவை அதிகாரத்துக்குத் தமிழர்களும் சேர்ந்து கொண்டு வந்தார்களோ அந்தத் தரப்போடு மைத்திரிபால சிறிசேன தானும் இப்போது சேர்ந்திருந்து கொண்டு அதே பண்பியல்பைப் பிரதிபலித்து, கொக்கரித்து நிற்கின்றார் என்பதே நிலைமை.

மஹிந்த ராஜபக்ஷ தரப்போடு சேர்ந்து அதே பாணியில் பேரினவாத மேலாதிக்கப் போக்கைப் பின்பற்றி அரசியல் செய்தால் தொடர்ந்து அதிகாரத்திலும், பதவியிலும் நீடிக்க லாம் என்ற நப்பாசை மைத்திரிபாலவையும் பேரினவாதக் குழிக்குள் விழத்தி விட்டது போலும்.

அண்மைக் காலத்தில் இதுவரை கோட்டாபய ராஜபக்ஷ வைச் சுற்றி நின்ற பேரினவாத சக்திகள், தரப்புகள் எல் லாம் இப்போது மைத்திரிபால சிறிசேனவுக்குப் பின்னால் அணி திரளத் தொடங்கிவிட்டன என்றும் கொழும்புச் செய்தி கள் சுட்டிக்காட்டுகின்றன.

இனவாதத்தைக் களைந்து, நல்லிணக்கத்தை ஏற் படுத்துவேன் என்ற உறுதிமொழியோடு அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால தொடர்ந்தும் ஆட்சி அதி காரத்தில் நீடிக்க வேண்டும் என்ற பதவி ஆசை வெறியால், பேரினவாதச் சட்டிக்குள் விழ்ந்து விட்டார்.

இனி அவரது போக்கும் நோக்கும் முழுமையாக பேரின வாதமாகத்தான் இருக்கப்போகின்றது என்பது நிச்சயம்.

அந்தத் தரப்பில் ஏனையோரிலும் விட அதிகளவில் இனவாதம் கக்குவதன் மூலம் – பேரினவாத மேலாண்மைச் செருக்குடன் நடப்பதன் வாயிலாக – அவர்களின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தானேதான் என்பதை உறுதிப்படுத்து வதற்காக மேலும் மேலும் இனவாதத்தை அவர் உமிழ்வார். அதை எதிர்கொள்வதைத் தவிர, அவரை ஆட்சிக்குத் தானும் சேர்ந்து கொண்டு வந்த தமிழருக்கு வேறுவழி யில்லை.

# நாடாளுமன்றத்தை கலைக்கமுடியுமா?

## பிரதமர் ரணிலுக்கு சவால் விடுகிறது மஹிந்த அணி

கொழும்பு, டிசெ. 18

முடிந்தால் நாடாளுமன் றத்தைக் கலைப்பதற்கான யோசனை ஒன்றை முன் வைக் குமாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் சவால் விடுப்பதாக மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகை யில் –

அரசமைப்பு மீறப்பட்டுள்ள தாகத் தெரிவித்து அதில் வெற் றியும் பெறப்பட்டுள்ளது. மக் களை மதிக்கும் பிரதமர் எனில் நாளையே நாடாளுமன்றத் தைக் கலைப்பதற்கான யோச னையொன்றை முன்வைக்க வேண்டும். ஏனெனில் நாடாளு மன்றத்தைக் கலைப்பதற்கான காலம் இப்போது சரி.

நாடாளுமன்ற கலைப்புத் தொடர்பான யோசனைக்கு நாம் கையுயர்த்த தயாராகவிருக் கின்றோம். மக்களின் அபி லாஷைகளை அழிக்க 117 பேருக்கு இடமளிக்கப்படாது. எனவே நாளையே இந்த யோச னையை முன்வைக்குமாறு நாம் சவால் விடுக்கின்றோம் – என்றார். (ஐ)

# 50 நாள்களின் பின் அலரி மாளிகையிலிருந்து மைத்திரியுடன் வெளியேறினாராம் ரணில்!

கொழும்பு, டிசெ. 18

பிரதமராக பதவியேற்ற பின்னர் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அலரி மாளிகையி லிருந்து தனது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க வுடன் வெளியேறி கொள்ளுப்பிட்டியில் அமைந் துள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி ரணில் விக்கிரம சிங்கவை ஜனாதிபதி பிரதமர் பதவியிலிருந்து விலக்கியதை அடுத்து தனக்கு நீதி கிடைக்கும் வரை ரணில் அலரி மாளிகையில் தொடர்ந்தும் இருப்பதற்கு தீர்மானித்தார். இதனைத் தொடர்ந்து கலாநிதி மைத்திரி விக்கிரமசிங்கவும் முழு நேர மாக அவருடன் அங்கேயே தங்கியிருந்தார்.

நல்லாட்சி அரசு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி அமைக்கப்பட்ட பின்னர் ஒக்ரோபர் 26 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ரணில்



விக்கிரமசிங்க 2 இரவுகள் மாத்திரமே அலரி மாளி கையில் தங்கியுள்ளார். ஆயினும் ஒக்ரோபர் 26ஆம் திகதிக்குப் பின்னர் அவர் முழு நேரமும் அங்கேயே தங்கியிருந்துள்ளார். நேற்றுமுன் தினம் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் மீண்டும் அவர் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். (ஐ)

# ஓ.எல். பரீட்சை விடைத்தாள் திருத்தம் டிசெ.23 ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 18

டிசெம்பர் 15 ஆம் திகதி யுடன் நிறைவடைந்த கல்விப் பொதுத்தராதரப்பத்திரசாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் முதற்கட்டப் பணி இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி இடம்பெறும் நத்தார் தினத்தன்று, இந்தப்பணி இடம் பெறமாட்டாது. இதேவேளை, விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் இரண்டாம் கட்டப் பணி, ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும், பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் சனத்பூஜித்த தெரிவித்துள்ளார்.

இது தவிர, விடைத்தாள் களை மதிப்பீடு செய்யும் தலைமை அதிகாரிகளுக்கான தெளிவுபடுத்தும் நிகழ்வு எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதேநேரம், பரீட்சை முறை கேடுகள் தொடர்பில் ஐந்து சம்பவங்கள் இடம்பெற்றிருக் கும் நிலையில், இவை தொடர் பில் பரீட்சைத் திணைக்களமும் பொலிஸாரும் தனித்தனியே விசாரணைகளை நடத்தவிருப் பதாகவும், பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# இரவு விழுந்த குழியில் பகலில் விழமாட்டோம்

## புதிய அமைச்சரவை குறித்து ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 18

புதிதாக அமைக்கப்பட்ட போவது ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையே எனவும், இதனை அமைக்கும் போது இரவு விழுந்த குழியில் பகலிலும் விழுவதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லையெ னவும் ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பி னர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் –

எமக்கு எதிராகச் செயற் பட்ட – நாட்டின் ஸ்திரத்தன்மை யைக் குழப்பியவர்களை எம் முடன் ஒருபோதும் இணைத் துக் கொள்ளத் தயாரில்லை. இத்தகையவர்களுடன் கூட்டு அரசொன்றை அமைக்க விரும்பவுமில்லை.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சி 30 அமைச்சர்களுடன் அமைச்சரவையை அமைக் கத் தீர்மானித்துள்ளது – என் றார். (ஐ)

# 340 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

நுகர்வோர் அதிகார சபையின் சட்டத்திட்டங்களை மீறிய 340 வர்த்தக நிலையங்களின் உரிமை யாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 9ஆம் திகதியி லிருந்து 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பண்டிகைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு 510 சுற்றிவளைப்புகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதில் அபராதப் பணமாக 13, 96,000 ரூபாய் அறவிடப்பட்டுள்ள தாகவும் நுகர்வோர் சேவைகள் அதி கார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# தெய்வீகக் கலையரங்கு

காரைநகர், டிசெ. 18

காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் தெய்வீகக் கலை ரங்கு, நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வேதபாராயணம், திருவாசக ஓதல், தமிழருவி த. சிவ குமாரன் வழங்கும் 'நாடகப் பாவை' எனும் தலைப்பிலான சொற்பொழிவு, கலாநிதி கிருஷாந்தி ரவீந்திராவின் நெறியாள்கையில் 'சிவானந்த தரி சனம்' நாட்டிய அர்ப்பணம் என்பன இடம்பெறும்.

## நாளை

19.12.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: பரணி பி.இ 2.34 வரை
திதி : துவாதசி பி.இ 4.21 வரை
சுபநேரம் : 4.53 – 6.23 வரை
இராகுகாலம் : 12.23 – 1.53 வரை

# தேர்தலுக்கு ஐ.தே.க. தயாராக வேண்டும்

## கூறுகிறார் நவீன் திஸாநாயக்க



கொழும்பு, டிசெ. 18

நாட்டில் நிலவும் அரசியல் குழப்பநிலைகளுக்கு முடிவு காண்பதற்காக தேர்தலுக்குத் தயாராக வேண்டியது அவசியம் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது நீண்ட இழுபறிக்கு மத்தியில் அரசியல் குழப்பநிலை தீர்ந்துவிட்டதான நிலைப்பாடு காணப்படுகின்றது. ஆனால் இது நிரந்தரமில்லை.

புதிய அரசு ஒன்றை அமைக்க வாய்ப்பு கிடைத்தமையானது எமக்குக் கிடைத்த வெற்றி என எடுத்துக் கொள்ளக்கூடாது. இன்று கிடைத்த ஆட்சி அதிகாரத்தின் மூலம் தேர்தலுக்குத் தயாராக வேண்டும்.

எனினும் எவ்வாறான பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம்.

எனவே பிரதமரான ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்–என்றார். (ஐ)

# போராளிகள் மீதான விசாரணை ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கண்டனம்

கொழும்பு, டிசெ. 18

தொடர்ச்சியாக முன்னாள் போராளிகள் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றமை ஓர் ஜனநாயக அச்சுறுத்தலாகும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனநாயகப்போராளிகளின் கட்சிக்கு இடையூறு வழங்குவதும், முன்னாள் போராளிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதும் தொடர்கிறது. இங்கு ஒரு தெளிவற்ற நிலையை நாங்கள் உணரக்கூடியதாக இருக்கின்றது.

வெளிப்படையாக ஒரு சில முன்னாள்போராளிகள் புலனாய்வாளர்களால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மறைமுகமாக 50ற்கு மேற்பட்டவர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள் ளார்கள் என்ற தகவல் எமக்குகிடைத்துள்ளது. இதனை விட தொலைபேசி ஊடாகவும் போராளிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.

போராளிகள் கட்சி ரீதியில் அரசியலில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சூழலில் எங்களின் அரசியல் செயல்திட்டத்துக்கு இடையூறுவிளைவிக்கும் செயலாகவும் இது அமைந்துள்ளது. இது ஜனநாயகத்தை மீறும் செயலாக அமைந்துள்ளது.

இவ்வாறு நடைபெறும் சம்பவங்களைச் சர்வதேச நாடுகளுக்கும் எடுத்துச் சொல்லியுள்ளோம். தொடர்ச்சியாக எங்களைச் சந்திக்கும் சர்வதேச இராஜதந்திரிகள் முன்னாள் விடுதலைப்புலிகள் ஜனநாயகத்துக்கு திரும்பியுள்ளமையை வரவேற்றுள்ளார்கள்.

உலகம் எங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. மீண்டும் எங்களைப் பயங்கரவாதிகள் எனச் சித்திரிப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை அரசு தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது–என்றார்.

# மட்டக்களப்பில் கடல் சீற்றம்

மட்டக்களப்பு, டிசெ. 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக நாவலடி-கல்லடி பிரதான வீதிகள் நீரினால் மூழ்கியுள்ளன.

இதன்காரணமாக அந்தப் பகுதியினூடான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நாவலடி கடல்நாச்சியம்மன் ஆலயத்தினுள்ளும் கடல் நீர் உட்புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தப் பகுதியில் கடல்கொந்தளிப்பு ஏற்படும் சமயங்களில் இலகுவில் கடல் நீர்உட்புகும்நிலையுள்ளதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தவீதியைப் புனரமைத்து தருமாறு கடந்தகாலங்களில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், இது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)

# நான்கு பிள்ளைகளுடன் தாயார் உண்ணாவிரதம்

## கைதான கணவரை விடுவிக்கக் கோரி




கொழும்பு, டிசெ. 18

வவுணதீவில் இரு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில்கைதுசெய்யப்பட்டுள்ள தனது கணவனை விடுதலை செய்யுமாறு கோரி, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நான்கு பிள்ளைகளுடன்தாய் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை முற்பகலிலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி வவுணதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள அஜந்தன் எனப்படும் சி.இராஜகுமாரனின் மனைவி மற்றும்பிள்ளைகளேஇவ்வாறுஉண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கணவன் கைதுசெய்யப்பட்டு 18 தினங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளான் என்றும், தனது கணவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், வலியுறுத்தியே இந்தத் தாய் மற்றும் பிள்ளைகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தனது கணவர் எந்தவித குற்றமும் செய்யவில்லை. அதனை பொலிஸாரும் கூறுகின்றனர். ஆனால் அவரை ஏன் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளார்கள் என்பது தெரியாத நிலையில் உள்ளதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள திருமதி செல்வராணி இராஜகுமாரன் தெரிவித்தார்.

தனது கணவனே தங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்துவந்த நிலையில், கடந்த 18தினங்களாக எந்தவித உதவிகளும் இன்றி கைக்குழந்தையுடன் கடுமையான துன்பத்தை எதிர்நோக்கி வருகின்றேன் எனவும் அவர் கூறினார்.

எனது கணவன் குற்றவாளியென்றால் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தி குற்றத்தை நிரூபித்து தண்டனை வாங்கிக்கொடுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்யுங்கள். அவரை விடுதலை செய்யும் வரை நானும் எனது பிள்ளைகளும் சாகும் வரையில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்வோம் என்றும் அந்தத் தாய் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இரு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 18

பொலனறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லேல்ல பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 2.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதியதிலேயே இந்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

கதுருவெல- கல்லேல்ல பகுதியைச் சேர்ந்த மொஹமட் அஸ்மீர் என்ற 17 வயதுடைய மாணவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலனறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அனுராதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தைப் பகுதியில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன் தினம் நள்ளிரவு 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த ஆதம் லெப்பே என்பவரே இந்த விபத்தின்போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சுதந்திரக் கட்சி எம்.பிக்களுக்கு எதிராக மாகாண முதலமைச்சர்கள் போர்க்கொடி

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக்கூடாது என்றும், ஐ.தே.க வுடன் கூட்டு அரசை அமைப்பதில் இருந்து அவர்களை விலகி இருக்குமாறும், ஆறு மாகாணங்களின் தற்போதைய மற்றும் முன்னாள் முதலமைச்சர்கள் கோரியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இவர்கள் நேற்று முன் தினம் மாலை மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவின் இல்லத்தில் சந்தித்து இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, ஐ.தே.கவுடன் மீண்டும் தேசிய அரசை அமைக்கும் எண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடையாது.

எனவே, ஐ.தே.க. அரசுக்கு சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாது.

எவராவது, ஐ.தே.க. அரசில் இணைந்து கொள்ள விரும்பினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி அவ்வாறு ஆதரவு வழங்கலாம். என்று கூறினார்.

அதேவேளை, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசலஜெயரத்ன இங்கு கருத்து வெளியிடுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு உறுப்பினரும், ஐதேக அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவியேற்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோருவார் என நம்பிக்கை வெளியிட்டார்.

முன்னாள் தென் மாகாண முதலமைச்சர் சான் விஜேலால் டி சில்வா உரையாற்றியபோது, ஐ.தே.க. அரசைத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தொலைவிலிருந்து கட்டுப்படுத்தப் போகிறது என்றும், கூட்டமைப்பின் தாளத்துக்கே ஐ.தே.க. அரசு ஆடும் என்றும் எச்சரித்தார். (ஐ)

# தமிழரின் உண்மையான குரலாக ஒலித்தவர் கலைஞர் கருணாநிதி

## சென்னைக் கூட்டத்தில் ராகுல் காந்தி புகழஞ்சலி

சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, தமிழ் மக்களின் உண்மையான குரலாக கருணாநிதி வாழ்ந்தார் எனப் புகழாரம் சூட்டினார்.

சென்னையில் தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற கருணாநிதி சிலை திறப்பு விழாவை தொடர்ந்து, ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.






இந்த கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேசுகையில் – கருணாநிதி சாதாரண அரசியல்வாதி அல்லர். தமிழ் மக்களின் உண்மையான குரலாக கருணாநிதி வாழ்ந்தார்.

தனது வாழ்நாளை மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர் கருணாநிதி. அவரின் எளிமையையும், அகங்காரம் இல்லாத குணத்தையும் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். அவரது சந்திப்பு எனக்கு உந்துதலாக இருந்தது.

கோடானு கோடி மக்களின் குரலைச் செவிமடுக்காத அரசாங்கமாக தற்போதைய பா.ஜ.க. அரசு உள்ளது. இந்தியாவின் ஒற்றுமையை சீர்குலைக்கும் இந்த அரசை விடக்கூடாது. நாம் ஒன்றுபட்டு நிற்போம்.

நான் இந்த விழாவில் பேசியதை கௌரவமாக கருதுகிறேன். நான் கருணாநிதியை பற்றி பேசும்போது தமிழகத்தின் பெருமையை, கலாசாரத்தை, பண்பாட்டை பேசுவதாக நினைக்கிறேன். நாட்டு ஒற்றுமையை பலப்படுத்துவேன். – எனத் தெரிவித்தார்.

# தமிழகத்திலிருந்து 40 பெண்கள் சபரிமலைக்கு செல்ல முஸ்தீபு

### மீண்டும் களேபரம் வெடிக்கும் என அச்சம்

சென்னை,டிசெ.18

சென்னையில் இருந்து 40 பெண்கள் வருகிற 22 ஆம் திகதி சபரிமலை பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணத்துக்கான பாதுகாப்பு கேட்டு கேரளா முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு அவர்கள் கடிதமும் அனுப்பியிருக்கிறார்கள்.

பெண்கள் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் செல்லலாமா? செல்லக்கூடாதா? என்ற சர்ச்சை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் 'சபரிமலை ஐயப்பன் கோவி



லில் அனைத்து வயது பெண்களும் அனுமதிக்கப்பட வேண்டும்' என்று இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் கேரளா மாநில அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதேவேளையில் 'கோவில் புனிதம் கெட்டுவிடாதா?' என்று பல்வேறு அரசியல் கட்சிகளும், இந்து அமைப்புகளும் ஐயப்ப பக்தர்களும் அங்கே போராட்டம் நடத்தி வருகின்றனர். நீதிமன்றத் தீர்ப்பைப் பயன்படுத்தி ஐயப்பனைத் தரிசிக்க வரும் பெண்களும் விரட்டியடிக்கப்பட்டு உள்ளனர். இதனால் புனித தலமான சபரிமலை தற்போது போராட்டத் தலமாக மாறியிருக்கிறது.

இந்த நிலையில் 'மனிதி' எனும் சமூக நல அமைப்பு சார்பில் 40 பெண்கள் அடங்கிய குழு சபரிமலைக்குச் செல்ல ஏற்பாடு செய்து வருகிறது. இந்த குழுவினர் சபரிமலை சென்று ஐயப்பனை தரிசிக்க முடிவு செய்திருக்கின்றனர். இதனால் சபரிமலையில் 22 ஆம் திகதியை ஒட்டி மீண்டும் களேபரம் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# மாலைதீவின் புதிய அதிபர் சோலி 3 நாள் விஜயமாக இந்தியாவுக்கு!



புதுடில்லி,டிசெ.18

மாலைதீவின் புதிய அதிபராகப் பதவியேற்ற இப்ராகீம் முகமது சோலி அதிபர் என்ற முறையில் தமது முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியா வந்தடைந்தார். இரு நாட்டு உறவுகளையும் பலப்படுத்தும் நோக்கில் 3 நாட்கள் பயணமாக அவர் நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார்.

மாலைதீவு அதிபராக அவர் கடந்த மாதம் 17 ஆம் திகதி பதவி ஏற்றார். பதவி ஏற்பு விழாவில் பிரதமர் நரேந்திரமோடி கலந்து கொண்டார். அப்போது இந்தியா வருமாறு நரேந்திர மோடி அவருக்கு அழைப்பு விடுத்தார்.

அதைத்தொடர்ந்து இரு நாட்டு உறவுகளையும் பலப்படுத்தும் நோக்கில் அவர் இந்தியா வந்தார்.

டில்லி விமான நிலையம் வந்த அவரை அதிகாரிகள் வரவேற்றனர். அவர் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திரமோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்தித்து பேசுகிறார். ஜனாதிபதி மாளிகையில் அவருக்கு விருந்து அளிக்கப்படுகிறது.

டில்லியில் மகாத்மா காந்தி சமாதியில் இப்ராகீம் முகமது சோலி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

# நஞ்சு கலந்த பிரசாதம் சாப்பிட்டதில் பலியானோர் எண்ணிக்கை 15 ஆனது

பெங்களூரு,டிசெ.18

கர்நாடகாவில் கோவிலில் நஞ்சு கலந்த பிரசாதம் சாப்பிட்டதில் பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கர்நாடகவின் சாம்ராஜ்நகர் மாவட்டத்துக்கு உட்பட்ட சுலவாடி கிராமத்தில் கிச்சுகுத்தி மாரம்மா கோவில் உள்ளது. இங்கு கடந்த வாரம் நடந்த கலச பூஜை நிகழ்ச்சியில் பக்தர்களுக்கு தக்காளி சாதம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

அந்தப் பிரசாதத்தை சாப்பிட்ட சிறிது நேரத்தில் பல பக்தர்கள் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து பலியானார்கள். வாந்தி, மயக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்பட்ட நூறுக்கும் மேற்பட்டோர் அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதில் சனியன்று நளினி என்ற



பெண் பலியானார். அதைத்தொடர்ந்து நேற்று காலையில் மேலும் 2 பெண்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இவர்களையும் சேர்த்து பலி எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது.



இந்தச் சம்பவம் தொடர்பாக கோவில் நிர்வாகி உள்பட 7 பேரை தனிப்படை பொலிஸார் பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இச்சம்பவத்தில் தொடர்பு டைய கிருஷ்ணகிரியை சேர்ந்த காலப்பா என்ற பூசாரியைப் பிடிப்பதற்காகப் பொலிஸார் கிருஷ்ணகிரி விரைந்துள்ளனர்.

# மூக்கில் உணவுக் குழாயுடன் பணிகளை தொடரும் முதல்வர்

கோவா முதல்வர் மனோகர் பாரிக்கர் மூக்கில் உணவுக் குழாய் பொருத்திக் கொண்டு சாதாரண நபர்போல் தனது ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதைப் பார்த்துப் பலரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர் கடந்த ஆண்டு கோவா முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார்.

அவர் அண்மையில் கணையப் பாதிப்பால் அவதியுற்றார். இதையடுத்து அவருக்கு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். எனினும் அவர் ஓய்வெடுக்காமல் வீட்டில் இருந்தபடியே தனது பணிகளை மேற்கொண்டார்.

இந்நிலையில் பாரிக்கர், பொர்வோரின் பகுதியிலிருந்து மெர்சீஸ் என்ற பகுதிக்கு வந்தார். அங்கு நடைபெற்று வரும் ஜூவாரி மற்றும் மாண்டோவி பாலங்கள் கட்டமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார். இந்த பாலங்கள் வடக்கு கோவாவுடன் பனாஜியை இணைக்கும்.



இந்தப் பணிகள் அடுத்த ஆண்டு முடிவடையும். மனோகர் பாரிக்கர் மூக்கில் உணவுக் குழாய் பொருத்தப்பட்ட நிலையில் ஆய்வு பணிகளை சர்வ சாதாரணமாக மேற்கொண்டுள்ளார். இந்த உணவுக் குழாய் மூலம்தான் அவருக்கு உணவும், மருந்தும் கொடுக்கப்படுகின்றன.

# அம்புலன்ஸ் ஹெலி நொறுங்கியது போர்த்துக்கலில் நான்கு பேர் சாவு

போர்த்துக்கல் நாட்டில் அம்புலன்ஸ் ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியாயினர்.

76 வயதான இதய நோயாளி ஒருவர் அவசர சிகிச்சைக்காக பிரகங்கா நகரில் இருந்து போர்ட்டோ நகர ஆஸ்பத்திரிக்கு சனியன்று அம்புலன்ஸ் ஹெலிக்கொப்டரில் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரை இறக்கிய பின்னர் அந்த ஹெலிக்கொப்டர் புறப்பட்ட இடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தது. அதில் அச்சமயம் மொத்தம் 4 பேர் இருந்தனர்.

வழியில் திடீரென அந்த ஹெலிக்கொப்டர், வான் போக்குவரத்துப் பிரிவின் ரேடார் திரையில் இருந்து மறைந்தது. அதைத் தொடர்ந்து அந்த ஹெலிக்கொப்டரைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டது. இதில் அந்த ஹெலிக்கொப்டர் போர்ட்டோ நகர் அருகே செர்ரா டி பியாஸ் மலையில் விழுந்து நொறுங்கி கிடந்தது தெரியவந்தது. அதில் வந்த 2 விமானிகள், ஒரு டாக்டர், ஒரு மருத்துவ ஊழியர் என 4 பேரும் பலியாகி விட்டனர்.

இந்த விபத்துக்கு மோசமான வானிலைதான் காரணம் என முதல்கட்ட தகவல்கள் கூறுகின்றன.

விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டர் 'அகஸ்ட்டா ஏ 109 எஸ்' ரகத்தைச் சேர்ந்தது ஆகும். 1997 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்த விமானம் இதுவரை 16 ஆயிரத்து 370 நோயாளிகளை ஏற்றிச்சென்றுள்ளதாகவும், எந்த விபத்திலும் சிக்கியது இல்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன.



# உணவு விடுதியில் வெடி விபத்து ஜப்பானில் 42 பேர் வரை காயம்





ஜப்பானின் சப்போரோ நகரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 42 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

வெடி விபத்தைத் தொடர்ந்து அந்த விடுதிக்கு அருகில் இருந்த ஒரு கட்டடமும் இடிந்து விழுந்ததாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

வெடிப்பைத் தொடர்ந்து எரிவாயு கசிந்த வாசனையும் உணரப்பட்டதாக காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்துக் குறித்த தகவலறிந்து, 20க்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகளில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தில் 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டுக்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்பிருப்பதாகவும் சப்போரோ நகர தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து சப்போரோ நகர பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# 15 பேருக்கு பாக். ராணுவ நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை தளபதி உறுதி செய்தார்




பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் 15 பயங்கரவாதிகளுக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. இந்த தண்டனையை அந்த நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் கமர் ஜாவத் பஜ்வா நேற்று முன்தினம் உறுதி செய்தார்.

பாகிஸ்தானில் பொவர் நகரில் இராணுவ கொன்டோன்மென்ட் பகுதிக்கு வெளியே கிறிஸ்தவ கொலனி உள்ளது. அங்கு கடந்த 2016 ஆம் ஆண்டு தற்கொலைப்படையினர் எனக் கூறப்படும் 4 பேர் தாக்குதல் நடத்தினர். இந்த பயங்கரவாத தாக்குதலில் உள்ளூர்வாசி ஒருவர் கொல்லப்பட்டார்.

இது குறித்து தகவல் அறிந்ததும் அங்கு சென்ற பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் 4 பேரையும் சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றனர். இதனால் அந்த கிறிஸ்தவ கொலனியில் பெரிய அளவில் உயிரிழப்புகள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு தலீபான் பயங்கரவாத அமைப்பின் துணை அமைப்பான 'திஜமாத் உர் அக்ரார்' பொறுப்பேற்றது. இது பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பயங்கரவாத தாக்குதலை நடத்துவதற்கு தூண்டுகோலாக இருந்தவர், 'தி ஜமாத் உர் அக்ரார்' அமைப்பை சேர்ந்த இப்ரார் என தெரியவந்தது.

இவர்தான் தாக்குதல் நடத்துவதற்கான ஆயுதங்களையும், போக்குவரத்து வசதியையும், இன்னபிற வசதிகளையும் பயங்கர வாதிகளுக்கு வழங்கினார் என்பதும் அம்பலத்துக்கு வந்தது.

இத்துடன் பல்வேறு பயங்கரவாத தாக்குதல்களில் மொத்தம் 34 பேரை கொன்று குவித்ததில் தொடர்புடைய 35 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது அந்த நாட்டில் உள்ள இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, குற்றவாளிகள் அனைவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து அவர்களில் 15 பேருக்கு மரண தண்டனையும், எஞ்சியவர்களுக்கு சிறைத்தண்டனையும் வழங்கி இரா ணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

பாகிஸ்தான் சட்டப்படி, இராணுவ நீதிமன்றில் பயங்கரமான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கும்போது, அதை இராணுவ தளபதி உறுதி செய்ய வேண்டும் என்பது நடைமுறை ஆகும். அதன் பிரகாரம் மேற்படி 15 பேரின் மரண தண்டனையையும் உறுதி செய்து இராணுவத் தளபதி ஜெனரல் கமர் ஜாவத் பஜ்வா நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இதை இராணுவ ஊடகப் பிரிவான ஐ.எஸ்.பி.ஆர். ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட கைதிகளின் பெயர் விவரம், அவர்கள் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய தகவல் வெளியிடப்படவில்லை. பாகிஸ்தானில் ஒரே நேரத்தில் 15 பயங்கரவாதிகளின் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கம்போடியத் துறைமுகத்தில் ஆயிரம் யானைத் தந்தங்கள்

## ஒரு கொண்டெய்னரில் பதுக்கல்



கம்போடியா நாட்டில் சட்ட விரோதமாகக் கடத்தி வரப்பட்ட சுமார் 3.5 தொன் அளவிலான யானைத் தந்தங்களை அதிகாரிகள் மீட்டுள்ளனர். அமெரிக்கத் தூதரகம் அளித்த தகவலின் பேரில், தலைநகர் நொம்பென்னில் துறைமுகத்தில் இருந்த யானைத் தந்தங்களை அந்நாட்டு சுங்கத்துறை அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், பளிங்குக் கற்கள் ஏற்றிவந்த கொன்டெய்னரில் சுமார் 1,026 தந்தங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்த கொன்டெய்னர், ஆபிரிக்க நாடான மொஸாம்பிக் பகுதியில் இருந்து கடந்த ஆண்டு கம்போடியாவுக்கு வந்தடைந்துள்ளது. இதன் உரிமையாளர் யார் என்ற விவரம் தெரியவில்லை. இதை இங்கிருந்து எந்த நாட்டுக்கு எடுத் துச்செல்லத் திட்டமிட்டுள்ளனர் என்பது குறித்தும் எதுவும் தெரியவில்லை. கம்போடியா துறைமுகத்தில் அதிக அளவில் பிடிபட்ட தந்தங்கள் இவை தான் - என்றனர்.

தாய்லாந்து, மலேசியா ஆகிய பகுதிகளில் இருந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கு சட்ட விரோதமாகத் தந்தங்கள் அனுப்பப்படுகின்றன. யானைத் தந்தங்கள் கடத்தப்படுவதற்கு மலேசிய துறைமுகங்கள் முக்கிய இடங்களாகத் திகழ்கின்றன என டிராபி என்ற அமைப்பு அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்திருந்தது. மலேசியாவில் சட்ட விரோதமாகத் தந்தங்கள் பரிமாற்றம் செய்வதாக அந்த அமைப்பு தெரிவித்திருந்தது. தாய்லாந்து, மலேசியா போன்றவை கம்போடியாவின் அண்டை நாடுகள். எனவே, மொஸாம்பிக்கில் இருந்து கொண்டு வரப்பட்ட தந்தங்களைக் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் இங்கு பதுக்கிவைத்திருக்கலாம்.

# மாலைதீவு முன்னாள் அதிபர் யாமீனின் 120 ரூபா கோடி சொத்துக்கள் முடக்கம்!

மாலைதீவில் அண்மையில் தேர்தலில் பதவியை இழந்த முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனின் 65 லட்சம் டொலர் (சுமார் 120 கோடி ரூபா) சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகி உள்ளது.

மாலைதீவில் கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி நடந்த தேர்தலில் பதவியை இழந்தவர் அப்துல்லா யாமீன். இவர் மீது ஊழல் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனது பதவி, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தித் தேர்தல் செலவுகளுக்கு நிதி திரட்டினார் என அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. மேலும் ஊழல் செய்த பணத்தை தனிப்பட்ட 2 வங்கி கணக்குகளில் அவர் சேர்த்து வைத்திருக்கிறார் எனவும் முறைப்பாடு எழுந்தது.

இது தொடர்பாக நாட்டின் நிதித்துறை அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் அப்துல்லா யாமீனிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் யாமீனுக்கு எதிராக ஊழல் வழக்கும் பதிவு செய்யப்பட்டு இருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, அப்துல்லா யாமீனுக்கு சொந்தமான 6.5 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 120கோடி) சொத்துக்களை முடக்க உத்தரவிட்டார். அதன்படி இந்த சொத்துகள் தற்போது முடக்கப்பட்டு உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


தனது 5 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சியில் சர்ச்சைக்குரிய பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்த அப்துல்லா யாமீன் தற்போது ஊழல் வழக்கில் விசாரணையை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாகரிக உணவு பழக்கங்களால் எம் மக்களுக்கு நேரும் சுகாதார கேடுகள் ஏராளம்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் விக்கி

**பற்சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வும் பற்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான சிகிச்சை முறைகளும் தொடர்பான பல்வைத்திய அறுவைச் சிகிச்சை நிபுணர் பொ. சுபாகரனின் 'அடிப்படை வாய்ச் சுகாதாரம்' பற்றிய நூல் வெளியீடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை இங்கு தரப்படுகின்றது.**



எமது சுகாதாரப் பழக்க வழக்கங்களில் மிகவும் முக்கியம் வாய்ந்ததும் அத்தியாவசியமானதுமான வாய்ச் சுகாதார பழக்கவழக்கங்களில் நாம் ஒருவரும் அக்கறை கொள்வதில்லை. காலையில் நித்திரை விட்டெழுந்தவுடன் ஏனோ தானோ என்று வாய்க்குள் பற்தூரி கையை விட்டு இரண்டு தடவைகள் சுத்தப் படுத்திவிட்டு, நீரைக் கொப்பளித்து விட்டு, குளித்து முழுகி எமது நாளாந்த கடமைகளை ஆரம்பிப்போம். அதன் பின்னர் பல இடங்களில் பல்வேறு உணவுப்பதார்த் தங்கள், இனிப்பு வகைகள், சுவையூட்டப் பட்ட குளிர்பானங்கள், இன்னும் கோப்பி, தேநீர் என பல்வேறு பதார்த்தங்களை எமது வாய்களின் ஊடாக உடலுக்குள் அனுப்புகின்றோம்.

ஆனால் ஒவ்வொரு தடவையும் உணவு உட்கொண்ட பின்னர் வாய் சுத்தம் செய்கின்ற பழக்க வழக்கங்கள் எம்மிடம் அறவே இல்லை. வெறுமனே கொப்பளித்தல் மூலம் வாய் சுத்தம் அடைந்து விடாது. மாறாக நாம் உண்ணுகின்ற பல்வேறு உணவுப் பதார்த்தங்களின் உணவுத் துணிக்கைகள் பல் ஈறுகளுக் குள்ளும் முரசுகளுக்கிடையேயும் தங்கி நின்று எமது உமிழ் நீருடன் சேர்ந்து பல்லாயிரக் கணக்கான பக்ரீரியாக்களை உருவாக்குகின்றன. வாயில் இருந்து துர் நாற்றம் வெளிவருவதற்கு இவை காரணமாக அமைகின்றன.

ஒருவருடைய வாயில் இருந்து துர் நாற்றம் வீசுவதை அவரால் உணர்ந்து கொள்ள முடியாத போதும் அருகில் இருப்பவர்கள் அந்தத் துர்நாற் றத்தை தாங்க முடியாமல் அவதிப்படுகின்ற பல நிகழ்வுகளை நாம் அவதானித்திருக்கின்றோம்.

பல் வைத்தியர்கள் பொதுவாகவே பற்சுத்தம் தொடர்பில் மக்களுக்கு பல்வேறு அறிவுரைகளை எடுத்துக்கூறி வருகின்ற போதும் பொதுமக்கள் அவற்றைக் கருத்தில் கொள்வதில்லை. பற்தூரிகையினால் எவ்வாறு பற்களை சுத்தம் செய்ய வேண்டும் என்ற முறைமை பற்றிக் கூட வைத்திய நிபுணர்களால் விளக்கப்படுகின்றது.

ஆனால் நாம் அவற்றில் கவனம் செலுத்துவதில்லை. விளைவு பற்களில் நுண்ணங்கித் தொற்றுக்கள் ஏற்பட்டு பல்வலி, பற்கூச்சம், முரசு வலி, முரசு வீங்குதல், முரசில் இருந்து இரத்தம் கசிதல், முரசு கரைதல், வாய்த்துர்நாற்றம் போன்ற பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றோம். அவை முற்றிய நிலையில் வைத்தியர்களை அணுகுகின்ற போது அவர்களின் தொடர் கவனிப்பின் பின்னர் பாதிக்கப்பட்ட பற்கள் பிடுங்கி எடுக்கப்படுகின்றன.

**ஒரு பல்லைப் பிடுங்கினால்...**

ஒரு பல்லைப் பிடுங்கி விட்டால் இனி வருத்தம் இல்லை, கொதி வலி ஒன்றும் இல்லை, நல்ல சுகமாக இருக்கின்றது என நாம் எண்ணுகின்றோம். ஆனால் பிடுங்கப்பட்ட பல்லின் இடைவெளியை நிரப்புவதற்கு அருகில் உள்ள இரண்டு பற்களும் அந்த இடைவெளியை நோக்கி சாய்கின்றன. அதே போல அந்த இடைவெளிக்கு நேராக மேலே அல்லது கீழே உள்ள பல் வளர்ச்சியடைந்துஅந்த இடைவெளியை நிரப்ப முனைவன. இதன் விளைவாக பற்களுக்கிடையே இடைவெளிகள் ஏற்பட்டு அந்த இடைவெளிகளில் கூடுதலான உணவுத்துணிக்கைகள் தங்க வழிவகுக்கும்.

ஒரு பல் வைத்திய நிபுணர்பிடுங்கப்பட்ட பல்லிற்குப் பதிலாக ஒரு செயற்கையான பல்லைக் கட்ட வேண்டும் என அறிவுறுத்தினால் நாம் உடனடியாகவே சிந்திக்கின்ற விடயம் வைத்திய நிபுணர் பணம் சம்பாதிப்பதற்காக ஒரு ஐடியா போடுகின்றார் என்று! அதே போன்று பற்சூத்தை, உடைந்த பற்கள், ஒழுங்கற்ற வடிவமுள்ள பற்கள், நிறம் மாறிய பற்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவது மிகவும் குறைவு.

இவை யாவை பற்றியும் இன்றைய சிறிய கைந்நூல் அறிவுரைகளை வழங்கியுள்ளது. இந்நூல் மிகக் குறைந்த 36 பக்கங்களை மட்டும் கொண்ட ஒரு சிறிய கைநூல் ஆகையால் இதனை முழுமையாக வாசிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் எம் அனைவருக்கும் கிடைத்துள்ளது. மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பது போல இப் புத்தகம் சிறியதாயினும் பல முக்கிய விடயங்களை உட்புகுத்திப் பட விளக்கங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் கற்று விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இலகு தமிழ் நடையில் இந்நூல் உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சம் ஆகும்.

இன்றைய சூழ்நிலையில் இளவயதுடைய வைத்திய நிபுணர்களும் ஏனைய துறைசார் விற்பன்னர்களும் வித்தியாசமான கோணத்தில் சிந்திக்க முற்பட்டிருப்பது எமக்கு மகிழ்வூட்டுகின்றது. ஓரிரு தினங்களுக்கு முன்னர் பளையில் அமைந் துள்ள பிரதேச வைத்தியசாலையில் ஒரு கண்காட்சி நிகழ்வுக்கு சென்றிருந்தேன். அந்த வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய நிபுணரும் ஏனைய வைத்திய அதிகாரிகளும், மருத்துவ உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என அனைவரும் இணைந்து கொண்டு ஒரு அரச நிறுவனத்தைப் பிரத்தியேக நிறுவனங்களுக்கு ஒப்பாக அல்லது ஒரு படி மேலாக எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பது பற்றிய ஒரு கண்காட்சியை நடத்தியிருந்தார்கள்.

அவர்களின் வினைத்திறன் மிக்க சேவைகள் பற்றியும் அவற்றின் ஊடாக பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்புக்கள் பற்றியும் அங்கு எடுத்துக் கூறினார்கள். அவர்களின் வினைத்திறன் மிக்க சேவைகள் பற்றி பல்வேறு செய்முறை உதாரணங்கள் வாயிலாக அந்த வைத்திய நிபுணர் எமக்கு விளக்கிக் கூறியிருந்தார். உண்மையிலேயே எமது அரச நிறுவனங்கள் அவர்களுக்குக் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி மக்கள் நலம் கருதி முறையாகச் செயற்படுவார்களேயாயின் தற்போது புரிகின்ற சேவையைப் போல இரண்டு அல்லது மூன்று மடங்கு சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும். ஆனால் அரச சேவையில் உள்ள ஒவ் வொருவரும் பொது மக்களுக்கான ஓர் அரச வேலையைச் செய்தால் தனக்கு எவ்வளவு இலாபம் கிடைக்கும் என்றே கணக்குப் பார்க்கின்றார்கள்.

**அரச அலுவலர் மக்கள் சேவையில் ஆர்வம் காட்ட வேண்டும்**

இந்த நிலை இனி மாற வேண்டும். அரச அலுவலர்கள் மக்கள் சேவையில் இனிமேலாவது கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கைலஞ்சம் பெறும் அலுவலர்கள் பலர் பொதுக் கூட்டங்களில் 'கைலஞ்சம் ஒழிக' என்ற முறையில் பாரிய பேச்சுக்களை நிகழ்த்தியமையை நான் பார்த்துள்ளேன். கைலஞ்சம் கொடுத்தவர்கள் தாங்களாகவே அந்த அலுவலர்களை அடையாளம் காட்டினாலும் முறையான விசாரணை ஒன்றில் வந்து சாட்சியமளிக்கத் தயங்குகின்றார்கள். இது தான் இன்றைய நிலை.

பல்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சுபாகரன் இந்த நூலை ஆக்கித்தந்ததன் மூலம் நல்லதொரு கைங்கரியத்தைச் செய்துள்ளார். பொதுவாகவே மக்கள் கடைப்பிடிக்கப் பின்னிற்கின்ற வாய்ச் சுகாதாரம் பற்றிய அடிப்படை அறிவுகளை துல்லியமாக படம்பிடித்துக் காட்டியிருக்கின்றார். உடலில் பற்கள் இருப்பது உணவைக் கடித்து நன்றாக அரைத்து உண்பதற்காகவே. ஆனால் அரிசி ஆலை உபகரணம் போன்று 24 மணி நேரமும் வாய்க்குள் உணவுகளைத் திணித்து அரைத்துக் கொண்டிருப்பதைக் கண்டித்துள்ளார். ஒவ்வொரு உணவின் பின்னரும் வாயை எவ்வாறு சுத்தம் செய்ய வேண்டும், பற்களைப் பாதிக்கக் கூடிய உணவு வகைகள் எவை, பற்களைப் பாதிக்காத வகையில் எவ்வாறான உணவுப் பதார்த்தங்களை பயன்படுத்த வேண்டும் என்பனபற்றி எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்;.

எமது மூதாதையர்கள் 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்று கூறினார்கள். இதனை இன்றைய வைத்திய நிபுணர்கள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்வார்களோ நான் அறியேன். ஆனால் எமக்குத் தெரிந்த 75 வயதைத் தாண்டி விட்டஒருவர் சிறு பிள்ளையில் இருந்து தினமும் ஆலம் விழுதின் மூலமாகவே பல் தேய்க்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பவர். அவருடைய பற்கள் அவரின் இன்றைய75 வயதிலும் சங்கு போல மினு மினு என்று எந்தவித பற்சூத்தையோ வேறெந்த பல் வலியோ அற்ற நிலையில் மிக அழகாக பராமரித்து வரப்படுகிறது.

அவர் இடையில் சில காலம் வெளிநாடொன்றில் சேவையாற்ற வேண்டிய தேவை ஏற்பட்ட போது அவரின் பிரயாணப் பையில் மிகக் கூடிய இடத்தை நிரப்பியவை ஆலம் விழுதுகளாகவே இருந்தனவாம். அதே போன்று அடுப்புக் கரியினால் பல் துலக்குகின்ற பழக்கமும் பற்களை பழபழ என்று அழகாக மினுக்கமாக வைத்திருக்கும். ஆனால் அந்தக் கரியில் உள்ள சிறிய துணிக்கைகள் பற்களிலும் முரசுகளிலும் கீறுகளை ஏற்படுத்தி விடும் என வைத்தியநிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறான பாரம்பரிய பல்துலக்கும் பழக்கங்கள் பற்றி ஆராய்வின் பின் எமது வைத்தியர்களே அறிவுரை வழங்க வேண் டும்.

இந்த நூலுக்கான அணிந்துரையை வைத்தியகலாநிதி சுரேஷ் சண்முகநாதன் வழங்கியிருக்கின்றார். இவர் எமது புகழ் பெற்ற சட்டத்தரணியும், நீதிபதியுமாக விளங்கிய எனது நண்பர் விகடகவி திரு நாவுக்கரசு அவர்களின் மருமகன் என அறிகின்றேன். நான் முதலமைச்சராகப் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் பற் சிகிச்சைக்கான விசேட கதிரைகளை வரித் தீர்வை இன்றி இறக்குமதி செய்ய எனது சிபார்சுக் கடிதம் கேட்டு என்னிடம் அவர் வந்தார் என ஞாபகம்.

அணிந்துரையில் அவர் ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிட்டுள்ளார். பின்வருமாறு கூறுகிறார் –

'தற்கால வாழ்க்கை முறை, சில பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு முறைகள் என்பன புதிய வகையான பல், முரசு சம்பந்தமான பிரச்சினைகள் அதிகமாக ஏற்படுவதற்கு காரணமாகின்றன' என்கிறார்.

இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தற்கால வாழ்க்கை முறை பல தவறான பழக்கவழக்கங்களுக்கு இடம் கொடுத்துள்ளன. நூலின் பக்கம் 11ல் பற்களைப் பாதிக்காத உணவுகள், பற்களைப் பாதிக்கக்கூடிய உணவுகள் சில தரப்பட்டுள்ளன. பாதிக்கக்கூடிய உணவுகள் என்று பார்க்கும் போது தற்கால வாழ்க்கை எமக்குத் தந்த தகுதியில்லாப் பரிசுகள் எவை என்பன தெரிய வரும். பாண், விஸ்கோத்துக்கள், Bun போன்ற ஒட்டுந்தன்மையான உணவுகள், சொக்கலட் போன்ற இனிப்பு வகைகள், கொக்கோ கோலா போன்ற காபன் கலந்த குளிர்பானங்கள் என்பன யாவும் தற்கால வாழ்க்கை எமக்குத் தந்த தகாத உணவுகள். அவற்றில் இருந்து விடுபட முடியாது நாம் தவிக்கின்றோம். ஆனால் அவற்றை உட்கொள்பவர்கள் அவற்றின் பாதிப்பில் இருந்து விடுபட நூலாசிரியர் இரு உபாயங்களை அளிக்கின்றார். காலையிலும் இரவு நித்திரைக்கு முன்னுமாக நாளுக்கு இரண்டு தடவைகள் fluoride அடங்கிய பற்பசையை பற்தூரிகை கொண்டு சரியான முறையில் பல் துலக்குதல் ஒன்று.

மற்றையது பற்களைப் பாதிக்காத வகையில் உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தி பாதுகாப்பான உணவுகளைத் தேர்ந்தெடுத்து சாப்பிடுதல். பற்களைப் பாதிக்காத உணவு வகைகள் என்று எம் முன்னோர் பாரம்பரியமாக உண்டுவந்த உணவுகளைக் குறிப்பிடுகின்றார். தானியங்கள், மரக்கறிவகைகள், பழங்கள், இலைவகைகள், மீன், இறைச்சி வகைகள், முட்டை, கடலை வகைகள், விதைகள், பருப்பு வகைகள், பால் உணவுகள், இளநீர், பழச்சாறு என்று அவற்றை அடையாளம் கண்டு குறிப்பிடுகின்றார். எனவே இன்றைய நாகரிகம் எமக்களிக்கும் பரிசுகளான பாண், சிற்றுண்டிகள், சொக்கலட், கொக்கா கோலா போன்ற பானங்களை முடியுமானவரை தவிர்ப்பது நல்லது என்றே படுகிறது.

இந் நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் கண்டவாறு நடவடிக்கைகள் எடுப்பது எமது பற்களை நாம் நீண்ட காலம் பாதுகாத்துப் பராமரிக்க உதவும். நூலின் கடைசிப் பந்தியை இங்கு குறிப்பிட்டு எனது சிற்றுரையை இத்துடன் முடிக்கின்றேன். அதாவது

'பற்களின் முக்கியத்துவத்தையும் பற்களை இழப்பதால் ஏற்படும் பாதிப்புக்களையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் வாழ்நாளில் ஒரு பல்லையேனும் கழற்றத்துணிய மாட்டார்கள்'.

# படையினரை மன்னித்தால்தான் தமிழ்க் கைதிகளுக்கு விடுதலை

## நிபந்தனை போட்டார் மைத்திரி

கொழும்பு, டிசெ. 18

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைவிடுவிப்பதாயின், தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரும் அதுபோன்றே விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றார்.

இதையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அப்போது அவர், குற்றமிழைத்த விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அவர்களில் பலர் வெளிநாடுகளில் வாழுகின்றனர்.

இந்த நிலையில், புலிகளுக்கு எதிராகப் போரிட்ட அரச படையினரை மாத்திரம் ஏன் குற்றச்சாட்டுகளுக்காக நீதியின் முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்?

சிறையில் உள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை விடுவிப்பதாயின், தடுப்புக்காவலில் உள்ள இராணுவத்தினரும் அவ்வாறே கையாளப்பட வேண்டும். என்று கூறியுள்ளார்.

அதேவேளை, இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தடுப்பில் உள்ள இராணுவத்தினரை விடுவித்தால் மட்டுமே, சிறையில் உள்ள தமிழ் கைதிகளை விடுவிக்க



ஒப்புதல் அளிப்பேன் என்று கூறினார் என்று நிகழ்வில் பங்கேற்ற ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் சக்திகளின் அழுத்தங்களால் தான், இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள் எனவும் குற்றம்சாட்டியிருந்த ஜனாதிபதி, அந்த நாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகளின் புலம்பெயர் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசு வலியுறுத்தியிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். (ஐ)

## சபையில் ஆசன ஒதுக்கீடு இன்று கூடி ஆலோசனை

கொழும்பு, டிசெ. 18

புதிய பிரதமராக மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளநிலையில், நாடாளுமன்ற ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பாக இன்று தீர்மானிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றம் மீண்டும் இன்று கூடவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக கூடவுள்ள கட்சித்தலைவர்களின்கூட்டத்தில் இவ்விடயம் தீர்மானிக்கப்படவுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் நாடாளுமன்றப் பாதுகாப்பு தொடர்பில் சபாநாயகருடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ.தே.கவின் அரசு எதையும் செய்யாது

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வாக்கு வங்கிக்கு பாதகமான விடயங்களை ஒருபோதும் நிறைவேற்றாது என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவிதமான நிபந்தனையுமின்றி வழங்கப்பட்ட ஆதரவுடன் தற்போது புதிய அரசு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் அரசே தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும். இந்நிலையில் உதாரணமாக அரசியல் கைதிகளின் விடயத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்பதைக் கூறமுடியாது. ஏனெனில் தென்னிலங்கையில் இவ்விடயமானது பெரும் எதிர்ப்பு அரசியலை ஏற்படுத்தும்.



இதேபோலவே அரசமைப்பு மற்றும் காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் காணப்படுகின்றன. எனவே இவ்விடயங்களுக்காக தனது வாக்கு வங்கிக்குப் பாதகமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு செயற்படாது.

முக்கியமாக இப்போது பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மிகக் குறுகிய காலத்துக்குள் பல தேர்தல்களைச் சந்திக்கவுள்ளதால் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைப்பது மிகவும் கடினமானதொன்றாகவே அமையும்–என்றார். (ஐ–07)

# இலங்கை இராணுவத்தினருக்கு சீனா கட்டிக் கொடுத்த பிரமாண்ட அரங்கம்

கொழும்பு, டிசெ. 18

தியத்தலாவ இராணுவ பயிற்சி அக்கடமியில் சீனாவின் உதவியுடன் கட்டப்பட்ட பணியக மற்றும் அரங்க வளாகம் ஜனாதிபதி மற்றும் சீனத் தூதுவரால், இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இந்த நிகழ்வு தியத்தலாவ இராணுவப் பயிற்சி அக்கடமியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், சீனத் தூதுவர் செங் ஷியுவான், இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, மற்றும் இலங்கை, சீன இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக மேஜர் ஜெனரல் ஷென் யுன் தலைமையிலான சீன இராணுவத்தின், உயர் அதிகாரிகள் குழுவொன்றும் இலங்கைக்கு வந்திருந்தது.

இந்த திறப்பு விழாவில் உரையாற்றிய இலங்கை இராணுவப் பயிற்சி அகடமியின் தளபதி, பிரிகேடியர் பி.கே. சேனாரத்ன, சீன மக்கள் விடுதலை இராணுவத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான நீண்ட கால இராணுவ உறவுகளைப் புதிய கட்டடம் இன்னும் வலுப்படுத்தும் என்று கூறினார்.

இலங்கையின் தேசிய மலரான தாமரையின் வடிவத்தில் இந்தப் புதிய கட்டடத்தை சீன இராணுவ அதிகாரிகள் கட்டிக் கொடுத்துள்ளனர்.

இந்த வளாகத்தில், பயிலுநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான பணியகம், போதனை மற்றும் அரங்க வசதிகள் உள்ளன.

785 ஆசனங்களைக் கொண்ட அரங்கத்தில், நவீன ஒளி, ஒலி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இங்கு உரையாற்றிய சீனத் தூதுவர் செங் ஷியுவான்,





இந்த விரிவான பணியக மற்றும் அரங்கக் கட்டடம், சீன அரசால் இலங்கைக்கு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளினதும், இரண்டு இராணுவங்களினதும், நட்புறவுக்கான இன்னொரு அடையாளமாக இது இருக்கும். சீனாவும் இலங்கையும் நல்ல அண்டை நாடுகள், நல்ல பங்காளர்கள், நல்ல நண்பர்கள்.

அனைத்துலக நிலைமைகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டபோதும், இரண்டு நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று துணையாக இருக்கின்றன.

இலங்கையும் சீனாவும் அமைதியை விரும்பும் நாடுகள். இரண்டு நாடுகளின் இராணுவங்களுக்கும் இடையிலான உறவு முக்கியமானது. இரு தரப்பு உறவுகளின் அபிவிருத்திக்குச் சாதகமானது.மலரும் தாமரையும், பசுமையான மலைகளும் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலையான சகோதரத்துவத்தையும், நட்பையும் சாட்சியாகக் கொண்டுள்ளன.

மூலோபாய பரஸ்பர நம்பிக்கையை அதிகரிக்கவும், அரசியல், பொருளாதார, இராணுவ, கலாசார மற்றும் பிற துறைகளில் விரிவான மற்றும் நடைமுறை ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும், இரு இராணுவங்களுக்கு இடையே உறவுகளைத் தொடர்ச்சியாக ஊக்குவிக்கவும், சீனா மற்றும் இலங்கையின் உறுதித்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றுக்கும், இரு நாடுகளின் தலைமைத்துவம் அதிக பங்களிப்பை வழங்கியுள்ளது. என்று தெரிவித்துள்ளார்.

புதிய பணியக மற்றும் அரங்க வளாகம், 7200 சதுர மீற்றர் பரப்பளவு கொண்டது. 2014ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்ட இந்த வளாகம், சீன இராணுவத்தின் இராணுவ விஞ்ஞான அக்கடமியினால் வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசியல் நெருக்கடியில் சி.ஐ.ஏ., எம்16 தலையீடு

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 18

இலங்கை அரசியல் நெருக்கடியில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பு (சி.ஐஏ) மற்றும் பிரித்தானியாவின் எம்–16 புலனாய்வு அமைப்புகளின் தலையீடுகள் இருந்ததாக, மஹிந்த ராஜபக்ஷ அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம்சாட்டியுள்ளார்.

பிரித்தானியாவின் தி கார்டியன் இதழில் வெளியான செய்தி ஒன்றுக்கு பதிவிட்டுள்ள கருத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சி.ஐ.ஏ., எம்.16 போன்ற வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டோம். இது ஒரு கடுமையான சமர் என்பது எங்களுக்குத் தெரியும்.

நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மை இல்லை என்று சபாநாயகர் அறிவித்தபோது, அங்கிருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆரவாரம் செய்தனர். அவர்கள் அனைவரும் இப்போது நன்றாக உறங்க முடியும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir


# பேர்த் டெஸ்டில் விழுந்து பமத்தது இந்தியா
# ஆஸியின் வெற்றித் தாகம் தணிந்தது

## 2ஆவது இன்னிங்ஸில் கோஹ்லி அணி 140 உடன் சுருண்டது



பேர்த்தில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து நீண்ட வெற்றித் தாகத்தை தணித்துக் கொண்டது ஆஸ்திரேலிய அணி.

நேற்று இந்த டெஸ்டின் இறுதி நாள் ஆட்டம் தொடங்கியது முதல் மொத்தம் 15 ஓவர்கள் மட்டுமே விளையாடிய இந்திய அணி மீதமிருந்த 5 விக்கெட்டுகளையும் 28 ஓட்டங்களுக்குள் போராடாமல் தாரை வார்த்துக் கொடுத்து தோல்வி அடைந்தது

இந்தத் தோல்வியின் மூலம் இந்த ஆண்டில் வெளிநாடுகளில் விராட் கோஹ்லி தலைமையில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் பெறும் 7 ஆவது தோல்வி இதுவாகும். இதற்கு முன் அதிகபட்சமாக ஓர் ஆண்டில் வெளிநாடுகளில் டெஸ்ட் போட்டி தோல்வி



என்பது 6 மட்டுமே. கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்தது. அதை இப்போதுள்ள இந்திய அணி முறியடித்து சாதனை படைத்துவிட்டது.

அதேசமயம், இந்த ஆண்டு டேர்பன் நகரில் நடந்த தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கடைசியாக ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது, அதன்பின் எந்த டெஸ்ட் போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறவில்லை.

ஏறக்குறைய 8 டெஸ்ட் போட்டிகளாக வெற்றியே இல்லாமல் வறண்டு, துவண்டு, சோர்வடைந்து கிடந்த ஆஸ்திரேலிய அணிக்கு இந்த வெற்றி நீர்பாய்ச்சி புதிய தெம்பை அளித்திருக்கிறது. இந்த வெற்றி மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது ஆஸ்திரேலிய அணி.

இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 8 விக்கெட்டுகள் வீழ்த்திய நாதன் லயன் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

அதேசமயம் இந்திய அணியும் கடந்த 2 டெஸ்ட் போட்டிகளில் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொண்டது. தொடக்க வீரர்கள் சரியில்லாமல் ஆடியதால், கடந்த 2 டெஸ்ட் போட்டியிலும் நடுவரிசை வீரர்களுக்கே சுமை கூடியது. குறிப்பாக சட்டீஸ்வர் புஜாரா, ரஹானே, விராட் கோஹ்லி ஆகியோரே கடந்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் பெரும்பாலும் சுமையைச் சுமந்தனர்.

ஆதலால், அடுத்து வரும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் தொடக்கக் கூட்டணியை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. இந்த டெஸ்ட் தொடரில் இருந்து காயம் காரணமாக பிரித்வி ஷா நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக மயங்க் அகர்வால், ஹர்திக் பாண்டியா வருகின்றனர். ஆதலால், புதிய வீரர்களை அணிக்குக் கொண்டு வந்து வரும் 2 ஆம் திகதி தொடங்கும் 'பொக்ஸிங் டே' டெஸ்ட் போட்டியை வலிமையாக எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இந்திய அணி உள்ளது.

அணியில் விராட் கோஹ்லிக்கு அடுத்தாற்போல், நின்று நிலைத்துத் துடுப்பெடுத்தாடக்கூடிய வீரர்கள் இல்லாதமை தோல்விக்கு முக்கியக் காரணமாகும்.

ரிஷப் பந்த் இளம் வீரராகவும், பொறுமையாக களத்தில் நிற்க இயல்பில்லாதவராகவும் உள்ளார். ஆதலால், அடுத்த 2 டெஸ்ட் போட்டிகளில் பார்த்தீவ் பட்டேலை களமிறங்கி இந்திய அணி சோதிக்கலாம். ஆஸ்திரேலிய மண்ணில் கடந்த காலத்தில் அவரின் அனுபவம், துடுப்பாட்ட அனுபவம் ஆகியவை இந்திய அணிக்கு சிறப்பு சேர்க்கும்.

இந்த டெஸ்ட் போட்டியில் வேகப்பந்துவீச்சுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்த கப்டன் விராட் கோஹ்லி, சிறப்பு வாய்ந்த சுழற்பந்து வீச்சாளருக்கு வாய்ப்பு அளித்திருக்கலாம். உமேஷ் யாதவுக்குப் பதிலாக துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் சிறப்பாகச் செயல்படும் ரவிந்திர ஜடேஜாவை அணியில் சேர்த்திருந்தால், கடைசி வரிசைத் துடுப்பாட்டத்தை அவர் பலப்படுத்தி இருப்பார்.

இந்திய – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் நடந்தது.



முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 326 ஓட்டங்களுக்கும், இந்திய அணி 283 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தன. 2ஆவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 243 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதையடுத்து, முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையையும் சேர்த்து இந்திய அணிக்கு 287 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், ஆடுகளமும் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக மாறியதால், தொடக்கமே இந்திய அணிக்கு அதிர்ச்சியாக அமைந்தது. இந்த டெஸ்ட் போட்டியிலும் கே.எல்.ராகுலும், முரளி விஜய்யும் சொதப்பலாக துடுப்பாடினர்.

### மோசமான தொடக்கம்

ராகுல் டக்அவுட்டிலும், முரளி விஜய் 20 ஒட்டங்களிலும் வெளியேறினார்கள். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட புஜாரா 4 ஒட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். முதல் இன்னிங்ஸில் சதம் அடித்து சவால் விட்ட விராட் கோஹ்லி 17 ஓட்டங்களிலும், ரஹானே 30 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 112 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இந்திய அணி இழந்திருந்தது. களத்தில் விஹாரி 24 ரன்களுடனும், ரிஷப் பந்த் 9 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

### 15 ஓவர்களில் முடிந்தது

விஹாரி கூடுதலாக 4 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஸ்டர்க் பந்துவீச்சில் மிட்விக்கெட்டில் ஹாரிஸிடம் கேட்ச் கொடுத்து 28 ஓட்டங்களில் வெளியேறினார்.



அடுத்து உமேஷ் யாதவ் களமிறங்கி, ரிஷப் பந்துடன் சேர்ந்தார். இருவரும் சில ஓவர்கள் மட்டுமே தாக்குப் பிடித்தனர். களத்தில் பொறுமை காக்காமல் ரிஷப் பந்த் அவசரப்பட்டு விக்கெட்டைப் பறிகொடுத்தார். லயன் வீசிய 54 ஆவது ஓவரில் பவுண்டரி அடித்த நிலையில் அடுத்த பந்தை ரிஷப் பந்த் தூக்கி அடிக்க அது மிட்விக்கெட் திசையில் ஹேண்ட்ஸ்கம் கையில் கேட்சாக மாறியது. ரிஷப் பந்த் 30 ஓட்டங்களில் ஆட்டமிழுந்தார்.

ஸ்டார்க் வீசிய 55ஆவது ஓவரில் அவரிடமே கேட்ச் கொடுத்து உமேஷ் 2 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார்.

55ஆவது ஓவரை வீசிய கம்மின்ஸ் தனது பங்கிற்கு டெய்லண்டர்கள் பும்ரா, இசாந்த் சர்மாவை டக்அவுட்டில் அனுப்பினார்.

56 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 140 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களில் தோல்வி அடைந்தது. ஆஸ்திரேலியா தரப்பில் லயன், ஸ்டார்க் தலா 3 விக்கெட்டுகளையும், ஹேசல்வுட், கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

## ஐ.தே.கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:–

சிலர் என்னுடன் நேரடியாகக் கருத்து கேட்காமல், என்னை அவமானப்படுத்தும் நோக்கிலும், தங்களைப் பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றனர்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், கிழக்குத் தமிழ் மக்களை பாதுகாக்கவேண்டும் என்ற நல்நோக்கிலேயே, பிரதி அமைச்சைப் பொறுப்பெடுத்தேன். கிழக்கில் தமிழர்கள் இனம் மாற்றம் செய்யப்படுகிறார்கள், நிலவளம் சூறையாடப்படுகிறது. அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டியது எம் பொறுப்பு.

தற்போதைய சூழலில் நான் பொறுப்பேற்ற பதவியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பதவி இல்லாவிட்டாலும் நான் ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக தொடர்ந்து கலந்துரையாடுகிறேன். அதில் எதுவித மாற்றமும் இல்லை.

ஆனால் ஜனாதிபதி இல்லாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேரப்போகிறேன் என்ற கதை உண்மைக்குப்புறம்பானது. ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை – என்றார். (ஐ)

## 8 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்களையும் அவர்களது படகுடன் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்து யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்றுக் காலை முற்படுத்தினர். கடல் கொந்தளிப்புக் காரணமாகவே தாம் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து அவர்களை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வருவதாகவும், அதனைக் கட்டுப்படுத்தநடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வடக்கு மீனவர்கள் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அமைச்சர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரியவருகின்றது.

இறுதிப்படுத்தப்பட்ட அமைச்சரவைப் பட்டியலை இறுதிநேரத்தில் மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டதாலேயே இன்று நடைபெறவிருந்த பதவியேற்கும் நிகழ்வு புதன்வரை பிற்போடப்பட்டுள்ளது.

அதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின்நுவரெலியாமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணனுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

இதன்படி மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துவிவகார அமைச்சு அவரிடம் கையளிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வடக்கை மையப்படுத்திய அந்த அமைச்சுப் பதவி சுவாமிநாதன் வசமிருப்பதை, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விரும்பவில்லை. பிரதமர் ரணிலிடம், சம்பந்தன் இதை நேரில் தெரிவித்துள்ளார். இதன்காரணமாகவே இந்த மாற்றம் இடம் பெறவுள்ளது.

எனினும், சுவாமிநாதனுக்குப் பிறிதொரு அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் எனவும், அதனுடன் இந்துவிவகார அமைச்சும் இணைக்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியாட்சி அமையும் பட்சத்தில், அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி 30 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் சுவாமிநாதனுக்கு 'வெட்டு' விழலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## புதிய ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அறிவித்துள்ளார்.

அதற்கிடையில் இடைக்காலக் கணக்கு அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளதாகவும், இதற்கும் ஓரிரு நாள்கள் தேவைப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள சபை அமர்வின் போது வரவு – செலவுத் திட்டமோ, இடைக்காலக் கணக்கு அறிக்கையோ முன்வைக்கப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசதுறையிலுள்ளவர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் உட்பட அரச செலவினங்களுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசரமாக இடைக்காலக் கணக்கு அறிக்கையொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியல் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 34 (1) என்ற பிரேரணைக்குக் கடந்த காலத்தில் இலங்கை அரசு இணை ஆதரவு வழங்கியிருந்தது.

அதாவது நாட்டில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும், தவறிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தற்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காக, இராணுவத்தினருக்கும் போர்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை அளிக்கவேண்டும் என ஜனாதிபதி நிபந்தனை விதிப்பதானது, அவர் வழங்கிய வாக்குறுதிகளை மீறும் செயலாகும் – என்றார். (ஐ)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணிகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பணித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் ஐந்தாவது அமர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தலை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு –கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் இதற்கு முன்னரான நான்கு அமர்வுகளின்போது வடக்கு – கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அவற்றின் சாதகத்தன்மைகள் தொடர்பாகவும் அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் காணப்படும் தடைகள் பற்றியும் அவற்றைத் தாண்டி மக்களுக்கு சிறந்த பலனைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய விதத்தில் இந்த அபிவிருத்திப் பணிகளை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது பற்றியும் இங்கு விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

குறிப்பாக வடக்கு – கிழக்குப் பிரதேசங்களின் நில விடுவிப்பு, பாதைகள் மற்றும் பாடசாலைகள் விடுவிப்பு, ஆனையிறவு உப்பளம், குறிஞ்சாத்தீவு உப்பளம், அச்சுவேலிகைத்தொழில்பேட்டை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, முல்லைத்தீவு ஓட்டுத் தொழிற்சாலை, வடக்கு – கிழக்குப் பிரதேசங்களின் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்கள், படையினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் சமூகத் தாக்கங்கள், கேப்பாபிலவு காணி விவகாரம், வட்டகச்சி விவசாயப் பண்ணை விடுவிப்பு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட மேலும் பல முக்கிய விடயங்கள் பற்றி இதன்போது விரிவாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், அத்துடன் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கவேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.சிறிதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, கே.கோடீஸ்வரன், அங்கஜன் ராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் வடக்கு–கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பற்றியும் அதன் போதுஎழுகின்ற தடைகள் பற்றியும் விரிவாகச் சுட்டிக்காட்டினார்கள்.

அந்தக் கருத்துக்களை மிகுந்த ஆர்வத்துடன் செவிமடுத்த ஜனாதிபதி, இனங்காணப்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வுகளைப் பெற்றுத் தரக்கூடிய வகையில் அவற்றை புதிய அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும், 2019 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு திட்டத்தின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீட்டை செய்வதாகவும் தெரிவித்தமையுடன், தனியார் முதலீட்டாளர்கள் மூலமாகவோ அல்லது அரச – தனியார் கூட்டு முதலீட்டு மூலமாகவோ தற்போது வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் செயலிழந்திருக்கும் தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அத்தோடு தனியாருக்குச் சொந்தமான காணிகளில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயச் செயற்பாடுகள் மேலும் தொடரப்படுவதை அனுமதிக்க முடியாது என்பதால் அத்தகைய காணிகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, யாழ். இராணுவ கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாரச்சி, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட செயலர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது. (ஐ)

## நாமல்குமாரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த 52 நாட்களாக இவர்கள் எதற்காக இவ்வாறு செயற்பட்டார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். இடையில், நாமல் குமாரவின் நாடகத்தையும் அரங்கேற்றினார்கள். இவையனைத்தையும் நாம் வெளிப்படுத்துவோம்.

பிரதமர் பதவியை மஹிந்த தியாகம் செய்தார் என டலஸ் அழகப்பெரும கூறுகிறார். அவர் தியாகம் செய்யவில்லை. மாறாக, நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டே அவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். இது உண்மையில், எமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்த வெற்றிக் கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் பட்டாசு வெடித்துக் கொண்டாடியபோது, சிலர் பிழையாக அதனை வெளிக்காட்டினார்கள். இதனை ஏதோ இனவாதச் செயற்பாடுபோல சித்திரிக்க முயற்சித்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களும் இலங்கையர்களே. அவர்கள் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைப் பட்டாசு வெடித்துக் கொண்டாடியதில் என்ன தவறு உள்ளது? இதனையிட்டு நாம் உண்மையில் மகிழ்ச்சியடைகிறோம் – என்றார். (ஐ)

## அரசியல் நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவு ஒன்றில் –

இலங்கையின் ஜனநாயக மற்றும் அரசமைப்பு விதிமுறைகளுக்கு உட்பட்ட, இந்த வார அரசியல் முன்னேற்றங்களை அமெரிக்கா வரவேற்கிறது. இலங்கை, இந்தோ – பசுபிக்கின் பெறுமதியான பங்காளராக இருக்கிறது.

இலங்கை அரசு மற்றும் மக்களுடனான எமது உறவுகளைத் தொடர்ந்து முன்நோக்கி நகர்த்திச் செல்வதற்கு நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இலங்கையின் உறுதியான நண்பர்கள் என்ற வகையில், அமைதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் அரசமைப்புக்கு அமைவாக, இந்த அரசியல் நெருக்கடி தீர்க்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

இலங்கையின் ஜனநாயக அமைப்புகளின் ஆற்றலை நாங்கள் பாராட்டுகிறோம். தேசிய நல்லிணக்கம், அனைவருக்கும் செழிப்பு ஆகியவற்றை நோக்கி நகர்வுகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவு அளிப்போம். என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## சர்வதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சிக்கு இனிமேல் இடமளியோம்.

– இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

இராஜதந்திர ரீதியில் – ஜனநாயக வழியில் போராடிய ஐக்கிய தேசிய முன்னணிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் புகழாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. நீதியின் வழியில் பிரதமர் கதிரையில் அவர் மீண்டும் அமர்ந்துள்ளார்.

நாட்டில் மீண்டும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசு மீண்டும் மலர்ந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் ஒற்றுமையாக – ஓரணியில் நின்று நல்லாட்சி தொடரத் தங்கள் பங்களிப்புகளை வழங்குவார்கள். கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்போம். அரசியல் சதித் திட்டத்துக்கு – சர்வாதிகார ஆட்சிக்கு இனிமேல் இடமளியோம் – என்றார். (ஐ)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) – இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான 'பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று மாலை நடைபெற்ற 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி' வெற்றிக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது எனச்சிலர் போலிப் பிரசாரம் முன்னெடுத்துவருகின்றனர். அவ்வாறு எவ்வித உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவில்லை. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே கூட்ட மைப்பு எம்முடன் கரம் கோர்த்தது. இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே நாம் அரசியல் நடத்தி வருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கவில்லை. பௌத்த மதத்துக்குத் தற்போது வழங்கப்படும் முன்னுரிமையை அப்படியே நீடிப்பதற்கு இணக்கம் தெரிவித் துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதியை நான் விமர்சிக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட ஒரு விடயத்துக்கு பதிலளிக்கவேண்டும். நாடாளுமன்றச் சம்பிரதாயத்தை மதித்தே ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். ஆனால், உண்மை அதுவல்ல, மக்கள் எழுச்சி – பலத்துக்கு அஞ்சியே ஆட்சி எம்மிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது – என்றார். (ஐ)





திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய 'துணிவே துணை – சிறுவர் கதை' நூல் வெளியீட்டு விழா காரைநகர் துருத்தித்தீவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் அஞ்சல் அதிபர் நிமலதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது...

# ஊடகங்களைப் புதிய அரசு தீவிரமாகக் கண்காணிக்கும்

## மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 18

புதிய அரசில் ஊடகங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுமென்றும், ஒவ்வொரு ஊடகங்களையும் தனித் தனியாகக் கண்காணிக்கும் வகையில் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தங்காலையில் உள்ள அவரது கால்டன் இல்லத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசில் நாடு துண்டாடப் படும். அதிலிருந்து ஊடகத்துடன் இணைந்து நானும் நாட்டைப் பாதுகாப்பேன்.

நாங்கள் ஆட்சி செய்த காலத்தில் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ பதவி வகித்த நேரங்களில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே கடன் வாங்கினோம். நாம் ஆட்சிக்கு வந்த 24 மணி நேரத்தில் எரிபொருளின் விலையைக் குறைத்தோம், நிவாரணம் வழங்கினோம். ஆனால், இவர்கள் எரிபொருளின் விலையை உயர்த்தியுள்ளனர், பிணைமுறி மோசடியில் ஈடுபட்டனர்.

அத்தோடு மத்தள விமான நிலையம், துறைமுகம், அதிவேக நெடுஞ்சாலை போன்றவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். நாட்டில் 35ஆயிரம் நிலபரப்பை வெளிநாட்டு இராணுவ முகாம்களுக்கும் வழங்கச் சூழ்ச்சியும் செய்துள்ளனர் – என்றார்.

# ஜனாதிபதியின் உரையால் ஐ.தே.கவினர் கடும் சீற்றம்!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த காலத்தை மறந்து தம் மீது வீண்பழி சுமத்துவதாக ஐக்கிய தேசிய முன்னணியினர் குற்றம் சுமத்துகின்றனர். அத்தோடு, நேற்று முன் தினம் அவரின் உரை தமக்கிருந்த சந்தேகத்தை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அலரி மாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்க 5ஆவது தடவையாகவும் நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதனை முடிவு என்று நாம் கூறமாட் டோம்.

ஏனெனில், பிரதமர் நியமனத்துக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை எமக்குச் சந்தேகத்தை இன்னும் வலுப்படுத்தியுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திய ஜனாதிபதியின் செயற்பாட்டை, நீதிமன்றமே பிழை எனக் கூறியுள்ளது.

இதனால், நாடும் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. இதற்கான பொறுப்பை மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

எவ்வாறாயினும், இந்தப் பாதிப்பிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. இந்தப் பணியை நாம் 2020 ஒகஸ்ட் மாதம் வரை சிறப்பாக மேற்கொள்ள எதிர்ப் பார்த்துள்ளோம் – என்றார். (ஐ)

# சூறாவளி தாக்கம் குறைவடையும்

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகிய சூறாவளி வடக்கு – வடமேற்கு திசையில் இலங்கையை விட்டு விலகி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதன் தாக்கம் நேற்றிலிருந்து படிப்படியாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம்விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சீரான வானிலை நிலவும். ஓரளவு குளிரான வானிலையும் எதிர்பார்க்கப்படுவதாக அது மேலும் கூறியுள்ளது.(ஐ)



# முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவி




யாழ்ப்பாணம், டிசெ. 18

சமூகத்தில் வறிய நிலையில் வாழும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான முடியப்பு றெமீடியஸ் தனது மாநகரசபை உறுப்பினர் பதவிக்கான இம்மாதத்திற்குரிய மாதாந்தக் கொடுப்பனவையும் செபஸ்ரியாம்பிள்ளை நியூட்டன் என்ற முன்னாள் போராளிக்கு வழங்கினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் றெமீடியஸ் வறிய நிலையில் வாழும் முன்னாள் போராளிகள் பலர் சுயதொழிலுக்கான முதலிடுகள் இன்றித் தமது குடும்பத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் வாழ்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு அவர்களது வறுமை நிலையை ஓரளவேனும் நிவர்த்திசெய்யும் வகையில் தனது மாதாந்த கொடுப்பனவை வழங்கி வருகின்றார்.

இந்நிலையில் அவர் தனது இந்த மாதத்துக்குரிய கொடுப்பனவை இரண்டு மாவீரர்களின் சகோதரரும் முன்னாள் போராளியுமாகிய செபஸ்ரியாம்பிள்ளை நியூட்டன் என்பவருக்குக் கடற்றொழில் உபகரணங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியாவும் பாராட்டு

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி தீர்க்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வதாக இலங்கையிலுள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

"இந்தியப் பெருங்கடலில் நீண்டகால நண்பர்கள் என்ற ரீதியில், இலங்கையின் அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றோம். அது இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகின்றது" எனவும், அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழுமைக்காக இலங்கையுடனான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இரு நாடுகளுக்கிடையில் உறவைப் பலப்படுத்தவும் எதிர்பார்ப்பதாகவும் ஆஸ்திரேலியத் தூதுவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்றத்தில் நேற்று எரிவாயு கசிவு

கொழும்பு, டிசெ. 18

நாடாளுமன்றச் சமையலறையில் ஏற்பட்ட எரிவாயுக் கசிவின் காரணமாக, அங்கிருந்த ஊழியர்கள் பாதுகாப்புப் படையினரால் வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுப் பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு மீண்டும் ஆரம்பம்

மன்னார், டிசெ. 18

மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் மீண்டும் நேற்றுத் திங்கட்கிழமை காலை சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி கடமையின் நிமித்தம் கொழும்பு சென்றமையால், இந்தப் அகழ்வுப் பணிகள் கடந்த வியாழக்கிழமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று 117 ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 21 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட மொத்தம் 276 முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.